விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 018 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 22 திங்கட்கிழமை (06.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில்

# ஐ.நாவில் சிறப்பறிக்கையை வெளியிட அரசு தீர்மானம்

## விசேட இராஜதந்திர குழுவும் நியமனம்

(கொழும்பு)

எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சிறப் பறிக்கையை வெளியிட அநுர அரசு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் விசேட இராஜதந்திரக் குழுவை நியமிக்க வும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் இருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் ஒருதொகை போதை மாத்திரைகளுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலி 15

## 5 வருடங்களில் விபத்துக்களால் 12, 140 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடந்த 5 வருடங்களில் வீதி விபத்துக்கள் காரணமாக நாட் டில் 12,140 மனித உயிர்கள் பலியாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித் 15

## யாழ்.மக்கள் பயப்படத் தேவையில்லை

# சட்டம், ஒழுங்கை நிறைவேற்ற பொலிஸார் தயாராக உள்ளனர்

## யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்கள் பயப்படத் தேவையில்லை. பொதுமக்கள் அச்சமின்றிச் செயற்படவும் சட்டம், ஒழுங்கை நிறைவேற்றவும் பொலி ஸார் தயாராக இருக்கின்றார்கள் என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க தெரிவித்தார்.

யாழ். நகரில் புத்தாண்டுக்கு முன்னிரவு இளைஞர் ஒருவர் மீது நடத்தப்பட்ட 15



## மின்சாரம் தாக்கியதில் இளம் குடும்பஸ்தர் மரணம்

## நெல் அறுவடை இயந்திரத்தை சுத்திகரித்தபோது விபரீதம்

(கிளிநொச்சி)

நெல் அறுவடை இயந் திரத்தை நீர்கொண்டு சுத்தி கரித்தபோது மின்சாரம் தாக்கி யதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி முரசுமோட்டை கோரக்கன் கட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் இச்சம் பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த பிரான்சித் ரஜீவன் (வயது-31)என்ற இளம் குடும்பஸ்தரே உயிரி 15

## வவுனியா இராணுவ முகாமில்

# மின்தாக்கி பலியான யானையை துண்டு துண்டாக வெட்டிய

## மூன்று இராணுவத்தினர் கைது

(வவுனியா)

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் இராணுவ முகாமில் மின்சாரம் தாக்கி இறந்த யானையை துண்டு துண்டாக வெட்டி குளத்தில் வீசியதாக மூன்று இராணுவ வீரர்கள் வனஜீவராசிகள் திணைக் களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 15

## எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில்

# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் ஒன்றிணைந்து போட்டியிடத் தீர்மானம்

(வவுனியா)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் 5 கட்சி களும் ஒன்றிணைந்து போட்டி யிடவுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

ஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்ட குழுக் கூட்டம் வவு னியா - கோவில்குளம் 15



# வடக்கு மக்களின் ஆணையை புரிந்துள்ளோம்

## பாதுகாப்பு அமைச்சர்

(03ஆம் பக்கம் பார்க்க)

# சுண்ணக்கல் அகழ்வுக்கு அதிகாரிகளே பொறுப்பு

## விசாரணை முன்னெடுக்கப்படும் - அமைச்சர் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சட்ட விரோதமான முறையில் இடம் பெறும் சுண்ணக்கல் அகழ்வு நடவடிக்கைகளுக்கு அரச அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டும் இது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப் படுமெனகடற்றொழில் அமைச்சர் இராம 15

## தமிழினப் படுகொலைக் குற்றவாளிகளை

# பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்த வேண்டும்

## கனேடிய கன்சர்வேட்டிவ் கட்சி

(ரொரன்ரோ)

தமிழினப் படுகொலை யினால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் நீதிக்காகக் காத் திருக்கிறார்கள்.

எனவே அக்குற்றங்களு டன் தொடர்புடையவர் கள் பொறுப்புக்கூற 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் மாமனிதரின் நினைவு தினம் அனுஷ்டிப்பு





*(யாழ்ப்பாணம்)*

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25வது ஆண்டு நினைவு தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ் கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் பொழுது முதன்மை நிகழ்வாக மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் புதல்வனும் பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

தொடர்ந்து குமார் பொன்னம்பலத்தின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதோடு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது .

அதனையடுத்துகுமார்பொன்னம்பலத்தின் நினைவு உரைகள் இடம்பெற்றது. (ம-7,33)

## ஐ.நாவில்...

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக்கூறல் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும்வகையில், விசேட இராஜதந்திரக் குழு ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன், 58ஆவது அமர்வுக்கு முன்னர் சிறப்பறிக்கையை வெளியிடவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், மனித உரிமைப் பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கப்படும் எந்தத் தீர்மானத்தின் 51/1 நகல்வடிவையும் இலங்கை தொடர்ந்து எதிர்க்கும்.

இலங்கையில் இடம்பெற்ற போரக் குற்றங்கள்குறித்த ஆதாரங்களைச் சேகரிக்கும் வெளிப்புறப் பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கும் எந்தத் தீர்மானத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இறுதி அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தின் நகல்வடிவை நிராகரிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் கடந்த ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.எனினும் உள்நாட்டுப் பொறிமுறை மூலம் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைப் பிரச்சினைகளுக்கு தீர்வினை காண்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

ஆனால் ஜெனிவா தீர்மானத்தில் உள்ள பல விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.எவ்வாறாயினும் பொறுப்புக்கூறும் விடயத்தை பிரதிபலிக்கக்கூடிய நேர்மையான அறிக்கையை கூடிய விரைவில் அரசாங்கம் முன்வைக்க உள்ளது. இந்த அறிக்கையானது ஜெனிவாவுக்கு பதிலளிப்பதாக அல்லாது எமது அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவதாகவே இருக்கும்.

குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையை பிரதிபலிக்கும் வகையிலேயே எமது சிறப்பறிக்கை அமையும். இதற்காக இலங்கையின் விசேட இராஜதந்திர குழு செயற்படுவதாகவும் குறிப்பிட்டது. (ம-7)

## கிளிநொச்சியில்

# நோயாளர் காவு வண்டியுடன் உழவு இயந்திரம் விபத்து

*(கிளிநொச்சி)*

முழங்காவில் ஆதார வைத்தியசாலையில் இருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு இரண்டு நோயாளிகளை ஏற்றிச் சென்ற முழங்காவில் வைத்தியசாலைக்குச் சொந்தமான நோயாளர் காவு வண்டி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்து நேற்று இடம்பெற்றுள்ளது.

பூநகரிக்கும் பரந்தனுக்கும் இடைப்பட்ட பகுதியில், நெல் மூட்டைகளை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தின் மீது மோதி நோயாளர் காவு வண்டி விபத்துக்குள்ளாகியது.

இந்நிலையில், விபத்துக்குள்ளான நோயாளர் காவு வண்டியின் முன் பக்கம் மிகவும் சேதமடைந்துள்ளது.

மேலும், அந்த நோயாளர் காவு வண்டி தொடர்ந்தும் இயங்க முடியாத நிலை ஏற்பட்டதால் நோயாளிகளை ஏற்றிச் செல்வதற்கு கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து மற்றுமொரு நோயாளர் காவு வண்டி வரவழைக்கப்பட்டது. (ம-7)

## பொறுப்பு...

லுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை நாம் தொடர்ந்து உறுதியாக வலியுறுத்துவோம் என கனேடிய கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியெர் பொய்லிவ்ர் தெரிவித்துள்ளார்.

தமிழர் மரபுரிமை மாதத்தை முன்னிறுத்தி அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் அவர், இது பற்றி மேலும் கூறியிருப்பதாவது,

நாம் ஜனவரி மாதம் முழுவதும் கடும் உழைப்பாளிகளைக் கொண்டாடுகின்றோம். கனடாவில் வாழும் தமிழர்கள் அவர்களது வரலாற்றுப் பாரம்பரியத்துடன் நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருக்கும் அதேவேளை, பல தசாப்தகாலமாக எமது சமூகத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர்.

இருப்பினும் நாம் கொண்டாடும் இந்தத் தமிழ் மரபுரிமை மாதம் துரதிஷ்டவசமாக அதற்குரிய முழுமையான கௌரவத்தை இன்னமும் பெற்றுக் கொள்ளவில்லை. அதே வேளை மிகமோசமான தமிழினப்படுகொலையினால் பாதிக்கப்பட்ட பலர் இன்னமும் நீதிக்காகக் காத்திருக்கிறார்கள்.

எனவே கனேடியகன்சர்வேட்டிவ் கட்சியினரான நாம் இந்த தமிழர் மரபுரிமை மாதத்திலும், இவ்வாண்டு முழுவதும் மேற்குறிப்பிட்டவாறான மிகமோசமான குற்றங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை உறுதியாக வலியுறுத்துவோம் என்றார். (ம-7)


அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்

நன்றி நவிலலும்



கடந்த 07.12.2024 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அம்மா

அமரர்

திருமதி மனோன்மணி கனகநாயகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் யா/ கரணவாய் மகா வித்தியாலயம்)

எங்கள் அம்மாவின் வாழ்விலும் பிரிவிலும் தூணாக நின்று உதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் நாங்கள் என்றென்றும் நன்றிக் கடன் பட்டுள்ளோம். முக்கியமாக அம்மா நோயுற்று இருந்த காலத்திலே அம்மாவின் உடன் நின்று காலநேரம் பாராது உதவிய இதயங்களைத் தலை தாழ்த்தி வணங்குகின்றோம்.

நோயுற்ற கால்த்திலே அம்மாவின் உடல் நிலையைக் கவனித்துக் கொண்ட வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களின் சேவைகளை நினைத்து மெய்சிலிர்க்கின்றோம்.

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வருகை தந்தவர்களுக்கும், உள்ளூரிலும் வெளியூரிலும் இருந்து நேரடியாகவும், தொலைபேசி வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பதாதைகள், பிரசாரங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் இறுதிக் கிரியைகளை முன்னின்று நடத்தியவர்களுக்கும் அவற்றில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு,

எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 06.01.2025 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் இடம்பெற இருப்பதால், அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்களின் குடும்பத்தினருடன் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மணிவாசா, மணியகாரன் தோட்டம்,
கரணவாய் தெற்கு,கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்
074 140 8457

(C-1959)



நெல்லியடியில்

ENGLISH CLASSES

G.C.E (A/L) பரீட்சைக்குத் தோற்றிய
மாணவர்களுக்கானது
05 மாத ஆங்கில பாடநெறி
அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்
ஆரம்பம் : 07.01.2025 மு.ப 8.00 மணி
2025 ம் வருடத்திற்கான புதிய வகுப்புக்கள்
Gr - 03 தொடக்கம் Gr - 11 வரை
ஆரம்பம் : 18.01.2025
ஒரு வகுப்பில் 15 மாணவர்கள் மட்டுமே அனுமதி

JAYA ENGLISH CLASSES
23, Mahathma Lane, Nelliady.
(மக்கள் வங்கி எதிர் ஒழுங்கை)
T.P : 077 1888 914

(2922)



கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை திருமதி **காருண்யா சந்திரகுமார்** அவர்களின் அன்பு மாமனார்

திரு. பொன்னு தர்மலிங்கம்

அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத்துயருடன்...
சேவையாளர் சங்கம்,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி

(2939)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்களின் ஆணையின் அர்த்தத்தை ஆழமாகப் புரிந்து கொண்டுள்ளோம்

## அமைச்சர் ஆனந்த விஜயபால

(அநுராதபுரம்)

**வடக்கு மக்கள் எமக்குப் பெற்றுத் தந்த மக்களாணையின் அர்த்தத்தை நாம் ஆழமாக புரிந்து கொண்டுள்ளோம்.**



கிளீன் ஸ்ரீலங்கா தேசிய வேலைத்திட்டத்தின் ஊடாக அந்த மக்களுக்குச் சிறந்த மனித நேய பொலிஸ் சேவையைப் பெற்றுக் கொடுப்போம்.

அதேபோன்று சட்டம், ஒழுங்கைப் பேணக்கூடிய ஒழுக்கமான சமூகத்தையும் உருவாக்க நாம் முன்னிற்போமென பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்ட பொலிஸ் பிரிவுகளில் இயங்கும் பொலிஸ் பிராஜ குழுக்களுக்கு கிளீன் ஸ்ரீலங்கா தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவுப்படுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொலிஸ் திணைக்களம் என்பன இணைந்து வடக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களுக்கு சென்றிருந்தோம்.

யாழ் உள்ளிட்ட வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள பொலிஸ் பிரிவுகளில் இயங்கும் பொலிஸ் பிராஜ குழுக்களுக்கு கிளீன் ஸ்ரீலங்கா தேசிய வேலைத் திட்டம் தொடர்பில் தெளிவு படுத்தினோம்.

இந்த வேலைத்திட்டத்தில் பொலிஸாருக்கு உள்ள பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் என்ன என்பது தொடர்பில் அவதானம் செலுத்தினோம்.

குறிப்பாக கடந்த இரண்டு பிரதான தேர்தலின் போதும் வடக்கு மக்கள் எமக்கு பெற்றுத்தந்த மக்கள் ஆணையின் நோக்கத்தை நாம் ஆழமாகப் புரிந்து கொண்டுள்ளோம். இந்த மக்களுக்கு சிறந்த மனித நேய பொலிஸ் சேவையைப் பெற்றுக் கொடுக்க நாம் தயாராக உள்ளோம்.

அதேபோன்று அந்த மக்கள் நீண்டகாலமாக முகம்கொடுத்து வரும் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கவும் வினைத்திறனான பொலிஸ் சேவையைப் பெற்றுக் கொடுக்கவும் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம்.

மேலும் வடக்கில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் பொலிஸ் திணைக்களங்களுக்குத் தமிழர்களை உள்ளீர்ப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தினோம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் சுற்றுச் சூழலைத் தூய்மைப்படுத்தும் திட்டம் மாத்திரம் அல்ல. நாட்டின் முழு கட்டமைப்பையும் சீரமைக்கும் தேசிய வேலைத் திட்டமாகும்.

அதற்குஅப்பால் சென்று ஒழுக்கமான சமூகமொன்றை உருவாக்குதல், சட்டத்தின் ஒழுங்கை உறுதிப்படுத்தல், இலஞ்சம், ஊழல், மோசடி, வீண்விரயம் அற்ற நாட்டைக் கட்டியெழுப்புதல் என்பவையும் இதிலடங்கும்.

இவை அனைத்தும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத் தின் கொள்கை மாத்திரம் அல்ல. கிளீன் ஸ்ரீலங்கா தேசிய வேலைத் திட்டத்தின் நோக்கமும் கூட.எனவே இந்த இலக்குகளை அடைய பொலிஸாரின் தலையீடு மிக முக்கியமானதாகும்.இந்த கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல பொலிஸார் நேரடியாகவும் மறைமுகமாகவும் தலையீடு செய்ய வேண்டும்.

நிச்சயம் இந்தத் திட்டத்தின் ஊடாகப் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் உலகபாதாளா குழுக்களின் செயற்பாடுகளை எம்மால் கட்டுப்படுத்த முடியும்.

எனவே இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் மிகவும் திட்டமிட்ட வகையிலும் நாம் முன்னெடுத்துச் செல்வோம் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# அதானியின் திட்டங்களை மீளாய்வு செய்ய குழு

(கொழும்பு)

இலங்கையில் இந்திய அதானி குழுமத்தின் எரிசக்தித் திட்டங்கள் குறித்த ஆய்வை மறுஆய்வு செய்ய ஒரு குழுவை நியமிக்க மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இது தொடர்புடைய திட்டம் எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

திட்டங்களுக்காக மதிப்பிடப்பட்ட செலவுகள் உள்ளிட்ட காரணிகளைக் குழு மதிப்பாய்வு செய்யும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதற்கு முன்னரும் இந்தத் திட்டங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

மன்னார் மற்றும் பூநகரி ஆகிய இடங்களில் முன்மொழியப்பட்ட காற்றாலை மின் திட்டங்கள் மொத்தம் 484 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் இயற்கை சமநிலை கெடும் என்ற வாதத்தை முன்வைத்து மன்னாரில் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்துக்கு பொது மக்கள் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# விபத்துக்கள் ஏற்படும் வகையில் சண்டிலிப்பாய் பாலம்

## நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வீதி, சண்டிலிப்பாய் வழுக்கையாற்றுப் பாலம் விபத்துக்களை ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேற்குறித்த பாலம் இருவழிப்பாதையாக அமைக்கப்பட்டிருக்கும் நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகர் நோக்கிச் செல்லும் பாலத்தின் வழித்தடத்தில் பாலம் வீதியை விட்டு கீழ் இறங்கிக் காணப்படுகிறது.இதனால் 'பாலத்தில் பயணிக் கும் வாகனங்கள் சடுதியாக வேகத்தைக் குறைக்க முற்படுவதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் குறித்த பாலம் கீழ் இறங்கிக் காணப்படுகிறது என்ற அச்ச நிலையுடன் பயணிப்பதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சண்டிலிப்பாய், சங்கானை, சித்தன்கேணி, சுழிபுரம், காரைநகர் மற்றும் பண்டத்தரிப்பு , மாதகல் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் பிரதான வீதியாகக் காணப்படும் மேற்குறித்த பாலத்தினூடாக பல்லாயிரக்கணக்கான மக்கள் பயணிக்கும் நிலையில், இப்பாலத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் பார்வையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வருடம் வல்லைப் பாலத்தில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் பலியானதை அடுத்து அங்கு விபத்துக்கள் ஏற்படாதவாறு அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.

இவ்வாறு விபத்துக்கள் நடப்பதற்கு முன்னரே விபத்தைத் தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (க)

# படைப்புழுத் தாக்கத்தால் சோளச் செய்கை பாதிப்பு

## பெரும் நட்டத்தில் செய்கையாளர்கள்



(திருமலை)

படைப்புழுவின் தாக்கம் காரணமாகச் சோளச் செய்கையாளர்கள் பெரும் நட்டத்தை எதிர்நோக்குவதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை கிண்ணியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் பல ஏக்கரில் சோளப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளபட்டு வருகின்றது.

இந்த நிலையில் படைப்புழுவின் தாக்கம் காரணமாக சோளச் செய்கையாளர்கள் பெரும் நட்டத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா பிரதேசத்தில் கற்குழி, வட்டமடு, பனிச்சங்குளம், குரங்குபாஞ்சான் மற்றும் வான் எல போன்ற பல பகுதிகளிலும் தற்போது சோள அறுவடை இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் படைப்புழு இனத்தின் தாக்கம் அதிகரிப்பதால் விளைச்சல் குறைந்து காணப்படுவதாகவும் இதனால் பாரிய நட்டத்தை தாம் எதிர்நோக்கியுள்ளதாகவும் சோளப் பயிர்ச்செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்தோடு பல இலட்சம் ரூபா செலவு செய்து சோளச் செய்கை மேற்கொண்டிருந்த போதும் உரிய விளைச்சல் கிடைக்கவில்லை, படைப்புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளதாகவும் பயிர்ச்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

# புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாளை மறுதினம் 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் குறித்த பணிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் என பரீட் சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி 2,849 பரீட்சை மத்திய நிலையங்களில், 2024 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள்- 2025

## செல்வச் செழிப்போடு செல்வாக்கையும் உங்களுக்கு அள்ளித் தரும்



சந்திரனை ராசிநாதனாகக் கொண்ட கடக இராசி அன்பர்களே!

இந்த ஆண்டு செல்வச் செழிப்போடு செல்வாக்கையும் உங்களுக்கு அள்ளித் தரும். அனைத்துக் காரியங்களிலும் சராசரிக்கும் கூடுதலான வெற்றிகளைக் காண்பீர்கள். சேமிப்புகள் ஆதாயம் தரும் விடயங்களில் முதலீடு செய்வீர்கள். திட்டமிட்டுச் சரியாகச் செயலாற்றுவீர்கள். கடினமாக உழைத்து லாபமடைவீர்கள். மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் உண்டாகும்.

**குடும்பம்:** உங்கள் பேச்சில் வசீகரமும் இனிமையும் வேதாந்த ரகசியங்களும் கலந்து இருக்கும். சமூகத்தில் உயர்ந்தவர்கள் மத்தியில் புதியதொரு மரியாதையும் வரவேற்பும் உங்களுக்கு கிடைக்கப் பெறும். தாயின் உடல் நலத்தில் சிறுசிறு தொந்தரவுகள் உண்டாகி நல்ல பராமரிப்பின் காரணமாய் உடல் நலம் பெறும். பூர்வ புண்ணிய சொத்துக்கள் உங்களை வந்து சேரும்.

வெகுகாலம் தீராத பிரச்சினைகள் தீரும். கணவன் மனைவி குடும்ப ஒற்றுமையில் சீரான நிலையே காணப்படும். உறவினர்கள் உங்களிடம் உதவிகளைப் பெற வருவார்கள். நடைமுறைச் செயற்பாடுகளை அறிந்து அதற்கேற்ப உதவலாம்.திருமண வாய்ப்புக்காக காத்திருப்பவர்களுக்கு உறவினர் சார்ந்த வகையில் சில தடைகள் வந்து விலகும். வெளிநாடு சென்று திரும்பும் யோகம் அதிகம் உண்டு. உடல், உள்ளத்தின் நலம் ஆரோக்கியமாக இருக்கும். பிள்ளைகள் சார்ந்த வகையில் வீண் செலவுகளை செய்யும் நிலை உருவாகி பின்னர் நீங்கிவிடும். குடும்ப ஒற்றுமையில் குழப்பங்கள் ஏற்பட்டு பின்பு சரியாகும்.

**பொருளாதாரம்:** பொருளாதாரம் மிகவும் சீராக இருக்கும். கடன் பிரச்சினை அனைத்தும் தீரும். பணப் பிரச்சினை தீர்வதற்கான வழிகள் ஏற்படும். நண்பர்கள் உறவினர்கள் மூலமாக தேக்க நிலை மாறும்.

**ஆரோக்கியம்:** உடல் நலத்தில் இருந்த பிரச்சினைகள் அனைத்தும் தீரும்.

**பெண்கள்:** பெண்கள் கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொண்டு தொழில் மேன்மை பெறுவார்கள். குறிப்பாக ஆடை வடிவமைப்பு, உணவு பண்டங்களை தயாரிப்பு, அழகு சாதன பொருட்கள் விற்பவர்கள் நிறைவான பொருளாதாரம் பெறுவார்கள். திருமண வாய்ப்புகளுக்காக காத்திருக்கும் பெண்களுக்கு சரியான வரன் அமையும். குறித்த நேரத்தில் தடைகள் விலகிவிடும்.திருமணமான பெண்களுக்கு கணவருடன் இருந்துவந்த மனபேதங்கள் விலகும்.

**உத்தியோகத்தர்கள்:** உத்தியோகத்தர்கள் தங்களின் குடும்பத்தினர் மகிழ்ச்சிக்காக சுபமங்களச் செலவுகளை செய்யும் வாய்ப்புகள் உருவாகும். உங்களுக்கு தேவையான பொருளாதாரம் நிறைந்த வகையில் கிடைக்கும். நீங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் மற்றவர்களால் வேதவாக்காக கருதப்படும். உங்களது நற்செயல்களால் புகழ் உண்டாகும். ஊழியர்களால் அதிகம் நேசிக்கப்படும் சூழ்நிலையும் உருவாகும். வீடு, வாகன வகைகளில் நல்ல லாப பலன்கள் நடந்து மனதை மகிழ்விக்கும். பிள்ளைகள் அதிக படியாக பணம் செலவழிக்கும் வாய்ப்புகளும் அதனால் தந்தை மகன் உறவு முறையில் சிறிது மனக்குறைவுகளும் உண்டாகி விலகும். எதிரிகளால் இருந்த இன்னல்கள் மாறி மனம் நிம்மதி பெறும். உடல் ஆரோக்கியமும் உயர்ந்திருக்கும். தந்தை வழியில் உள்ள சொத்துக்கள் ஆதாய பலன்களைத் தரும். பார்க்கும் உத்தியோகத்தில் முழு தன்னிறைவும் பாராட்டுகளும் கிடைக்கும்.

**வியாபாரிகள்:** உணவுப் பொருட்கள், பர்னிச்சர் மற்றும் ஆடம்பரப் பொருட்களை உற்பத்தி செய்வோர் அதிக லாபங்கள் பெறுவார்கள். ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். விற்பனையிலும் தகுந்த மேன்மை பெறுவார்கள். விருதுகள் பாராட்டுகள் பெறுவார்கள். ஏற்றுமதி தொழில் செய்வோருக்கு வெளிநாட்டிலிருந்து நிறைய ஓடர்கள் கிடைக்கும். ரியல் எஸ்டேட் சம்பந்தமான தொழில் செய்வோர் அபிவிருத்தி அடைவார்கள். எதிரிகளால் இருந்த மனக்கவலைகள் நீங்கி விடும்.

**அரசியல்வாதிகள்:** அரசியல்வாதிகள் தங்கள் செயல்களைச் சாதனைகளாக மாற்றிக் காட்டுவீர்கள். கட்சி மேலிடத்தின் பாராட்டைப் பெறுவீர்கள். தொண்டர்களின் ஆதரவுடன் புதிய செயல்களைச் செய்து முடிப்பீர்கள். உங்கள் செயல்களில் ஏற்படும் இடையூறுகள் தானாகவே விலகி விடும். உங்கள் கருத்துக்களை அடுத்தவர்களிடம் திணிக்க முயல வேண்டாம். எதிரிகளின் சூழ்ச்சியால் இருந்த அவப்பெயர் நீங்கும். அரசாங்கம் மூலமாக தொழில் செய்பவர்கள் அரசு சார்ந்த அதிகாரிகளிடம் தகுந்த அனுசரணையுடன் அடைந்து ஏற்றம் பெறுவார்கள். அரசியலில் புதிய பிரவேசம் நிகழ்த்த இருப்பவர்கள் சனி பகவானின் நல்லருளைப் பலமாகப் பெற்று மக்களிடம் நற்பெயர் பெறுவார்கள்.

**கலைத்துறையினர்:** கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். திறமைகள் பளிச்சிடும். நல்ல வருமானம் கிடைக்கும். சக கலைஞர்கள் மற்றும் ரசிகர்கள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். சிலருக்கு விருதுகள் கிடைக்கும். உங்களின் சமயோஜித புத்தியால் தக்க தருணத்தில் சரியான முடிவெடுப்பீர்கள். போதும் என்கிற மனநிறைவைப் பெறுவீர்கள். தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். உடல் நலத்தில் கவனம் செலுத்தவும். உடன் பணிபுரியவர்கள் உங்கள் பேச்சைக் கேட்டு நடந்தாலும் அவர்களால் பெரிய நன்மைகள் உண்டாகாது. அநாவசியப் பேச்சுகளைத் தவிர்க்கவும். சினிமா சார்ந்த டெக்னீசியன்கள் நிறைய வேலை




வாய்ப்பு பெறுவார்கள். மரத்தில் சிற்பங்களை வடிவமைக்கும் கலைஞர்கள் புதிய முயற்சிகளினால் வரவேற்பு பெறுவர்.

**மாணவர்கள்:** மாணவர்கள் கட்டடக்கலை, விவசாயம், மெக்கானிக்கல் துறையைச் சார்ந்த மாணவர்கள் சிறந்த வாய்ப்புகளை பெறுவார்கள். உற்சாகமான மனநிலையுடன் கல்வியில் ஈடுபடுவீர்கள். உடல் வலிமை பெற உடற்பயிற்சிகளையும், மன வலிமை பெற யோகா போன்றவைகளையும் மேற்கொள்வீர்கள். வருங்காலத் திட்டங்களுக்காக அடித்தளம் போடுவீர்கள். விளையாட்டுகளில் வெற்றிகளைக் காண்பீர்கள். உங்களின் தன்னம்பிக்கை படிப்படியாக உயரும். மேற்படிப்பிற்கு தேவையான பொருளாதார வசதிகள் தன்னிறைவாய் கிடைக்கும். மற்றவர்கள் பாராட்டும் வண்ணம் உங்கள் செயற்பாடுகள் இருக்கும்.

**புனர்பூசம் 4 ஆம் பாதம்:** இந்த ஆண்டு மனதிருப்தியுடன் காரியங்களைச் செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். பயணம் செல்ல நேரலாம். மனதுக்குப் பிடித்தவர்களை சந்திக்க நேரிடலாம். பெரியவர்களின் சந்திப்பு மனதிற்கு மகிழ்ச்சியை உண்டாக்கும். உடனிருப்பவர்களுடன் எச்சரிக்கையாகப் பழகுவது நல்லது. ரகசியங்களை கையாளுவதில் கவனம் தேவை. அதீத கவனத்துடன் செயற்படுவது உங்களுக்கு பதவி உயர்வு மற்றும் வெற்றியைத் தேடித்தரும். எதிர்பார்த்த வாய்ப்புகள் வந்து சேரும். சிலருக்கு நெடுநாளைய ஆசைகள் நிறைவேறும். லட்சியங்கள் கைகூடும். மனதிற்கு நெகிழ்ச்சியான சம்பவங்கள் நடக்கும். நிதானம் தேவை.

**பூசம்:** இந்த ஆண்டு ஓடர்கள் எடுப்பதில் கவனம் தேவை. லாபம் உண்டாகும். கடின உழைப்பு உங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும். சிறு சிக்கல்கள் ஏற்பட்டு மறையும். கவனத்துடன் செயற்பட்டால் சிக்கல்களைத் தவிர்க்கலாம். சின்னச் சின்ன செலவுகளை சந்திக்க நேரிடலாம். உழைப்பிற்கான ஊதியம் சற்று குறைவாகக் கிடைக்கலாம். மனதைரியத்தால் வெற்றி காண்பீர்கள். பொறுப்புகள் அதிகரிக்கும். உற்சாகமாக எதையும் கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். விருந்து கேளிக்கைகளில் பங்கு கொள்வீர்கள். கடன் பிரச்சினை குறையும். வீண் அலைச்சல், வீண்பயம்குறையும். அடுத்தவர் செய்யும் இடையூறுகளையும் உங்களுக்கு சாதகமாக பயன்படுத்தும் சாமர்த்தியத்தைப் பெறுவீர்கள்.

**ஆயில்யம்:** இந்த ஆண்டு எடுத்த காரியத்தை எப்படியும் செய்து முடித்து விடுவீர்கள். வீண் செலவை உண்டாக்குவார். வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திட்டமிடுவதில் பின்னடைவு ஏற்படும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். பெரியோர் நேசம் கிடைக்கும். வாகன யோகம் உண்டாகும். ஆன்மீக தலங்களுக்கு சென்று வரும் வாய்ப்பு கிடைக்கும். தொழில் வியாபாரம் வாக்கு வன்மையால் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகலாம். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். உத்தியோகம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரலாம். உத்தியோகத்தர்கள் புத்தி சாதுரியத்தால் மேலதிகாரிகள் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பார்கள்.

**பரிகாரம்:** முடிந்த வரை செவ்வாய்க்கிழமைதோறும் அருகிலிருக்கும் முருகன் கோவிலுக்குச் சென்று வலம் வரவும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன்.

**அதிர்ஷ்ட எண்கள்:** 2, 5

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமனிதர் குமார்பொன்னம்பலத்தின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

(வவுனியா)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25 ஆவது நினைவுதினம் தமிழர்தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் நேற்றுக் காலை அனுஷ்டிக்கப்பட்டது.

அவர்கள் போராட்டம் மேற்கொள்ளும் வீதி அபிவிருத்தித் திணைக்களத் திற்கு முன்பாகவுள்ள கொட்டகையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அன்னாரது படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது டன் நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். (நி)

# சிகிரியா குன்றில் மின்தூக்கியை நிறுவ சுற்றுலாத்துறை அமைச்சு திட்டம்

(கொழும்பு)

சிகிரியா குன்றில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மின்தூக்கியை நிறுவுவது குறித்து அவதானம் செலுத்தப்படவுள்ளதாகச் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

சிகிரியா மற்றும் அதனை சூழவுள்ள சுற்றுலாப் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பில் அண்மையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிகிரியாவிற்கு பிரவேசிக்கும் முதியவர்கள், விசேட தேவையுடையவர்கள் மற்றும் நோயுற்றவர்களை இலகுவாக அழைத்துச் செல்வது போன்ற விடயங்களில் கவனம் செலுத்தும் வகையில் இந்தத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி)

# கோழி இறைச்சியின் விலையில் மாற்றமில்லை

### கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம்!

(கொழும்பு)

நாட்டில் தற்போது முட்டை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும் கோழி இறைச்சியின் விலை குறைவடையவில்லை என அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகசந்திப்பில் அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், முட்டை மற்றும் கோழி இறைச்சிக்கு விதிக்கப்பட்டுள்ள வற் வரி குறைக்கப்பட்டால் இறைச்சி சார்ந்த உணவுப்பொருட்களின் விலையைக் குறைக்க முடியும் என அவர் குறிப்பிட்டார். (நி)

# அபிவிருத்தித்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

2025 ஆம் ஆண்டு அபி விருத்தியின் பொருத்தமான கிராமத்தை தெரிவு செய்தலும் முன்னுரிமைப்படுத்தலும் வேலைத்திட்டத்திற்கு அமைவாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலகங்களில் இருந்தும் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து தேறாங்கண்டல் கிராம சேவையாளர் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் குறித்த வேலைத்திட்டமானது கடந்த வெள்ளிக்கிழமை துணுக்காய் பிரதேச செயலாளர் ரமேஸ் தலைமையில் தேறாங் கண்டல் பொது நோக்கு மண்டபத் தில் நடைபெற்றது.

இதில் முக்கியமாக வீதி போக்குவரத்து, விவசாயம், கல்வி, வாழ்வாதாரம், காணி, அடிப்படை வசதிகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் ஆகிய விடயங்கள் தொடர்பாக எவ்வகையான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் தேவைப்பாடுகள் இருக்கின்றன என்பது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் துணுக்காய் பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், உதவி மாவட்ட செயலாளர், காணி பயன்பாட்டுப் பிரிவு உத்தியோகத்தர், கலாச்சார உத்தியோகத்தர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், காணிக்கிளை உத்தியோகத் தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலகர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத் தர்கள், திட்ட மிடல் கிளை உத்தியோகத்தர்கள்,

முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், முதியோர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (8)

# திரிபோஷா நிறுவனத்தை தொடர்ந்து நடத்தத் திட்டம்

(கொழும்பு)

நாட்டு மக்களின் போசாக்கு தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மறுசீரமைத்து, அதனை அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனமாக தொடர்ந்து நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

திரிபோஷா நிறுவனத்தின் தற்போதைய நிலைமை மற்றும் அதன் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து சுகாதார அமைச்சர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந் துரையாடலின் போது சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

திரிபோஷா உற்பத்தி திறனை அதிகரிப்பது, புதிய தயாரிப்புகளை அறிமுகம் செய்தல், பதவி உயர்வு மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்தும் இக் கலந் துரையாடலின் போது விரிவாக விவாதிக்கப்பட்டது. (நி)



வடமாகாண காணி ஆணையாளர் திணைக்கள கட்டிடம் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் திறந்து வைக கப்பட்டது. வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் தலைமையில் திறந்து வைக் கப்பட்டது.

(படம்- தேவானந்தன்)

# இராசிபலன்

06.01.2025
மார்கழி 22, திங்கட்கிழமை
சப்தமி முன்னிரவு 7.07 மணிவரை

உத்தரட்டாதி முன்னிரவு 7.58 மணிவரை
சுபநேரம் 12.31-2.01 மணிவரை
இராகுகாலம் 8.01-9.31 மணிவரை

சந்திராஷ்டமம்
மகம், பூரம்.

**வளவன்**

**மேஷம்** – வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், தொழில் நலன் கருதிய பயணமொன்று ஏற்படலாம், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** – பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் கூடும், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** – முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, அரசு வழியில் எதிர்பார்த்த விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**கடகம்** – பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**சிம்மம்** – சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி** – பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**துலாம்** – வியாபாரவிருத்திக்கு வித்திடுவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் விலகும், பொது வாழ்வில் புகழ்கூடும், பழைய பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**விருச்சிகம்** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், தொழில் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்,கல்யாணக் கனவுகள் நனவாகலாம்,தாழ்ந்த சுபாவமுண்டு.

**தனுசு** – திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் வழியில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பெற்றோர் நலனில் அக்கறை கூடும்.

**மகரம்** – பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வழிபாடு சிறப்பினைத் தரும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும்.

**கும்பம்** – எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், விரதங்களில் நம்பிக்கை கூடும்.

**மீனம்** – எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள்,திடீர் பயணங்களால் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**நோய் இன்றி வாழ நினையுங்கள். அடுத்தவரை நோகடித்து வாழ நினைக்காதீர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திருவெம்பாவை முன்னிட்டு நடைபெற்ற பாதயாத்திரை



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில் திருவெம்பா விரதத்தை முன்னிட்டு நேற்று நடத்தப் பட்ட ஈழத்துச் சிதம்பரம் நோக்கிய பாத யாத்திரை சம்பில்துறை சிவபெருமான் திருச்சொரூப முன்றலில் ஆரம்பமாகியுள்ளது.(நி-33)





நல்லூர் பிரதேச செயலகம் சி.சி.எச் நிறுவனம் மற்றும் இயற்கை ஊக்குவிப்புக் கழகம் ஆகியன இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை கிழக்கு அரியாலை பகுதியில் பறவைகள் அவதானிப்பு மற்றும் உயிர்ப்பல்வகைமை பயணவழிக் கற்றல் நிகழ்வு நடைபெற்றது.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## களாக்காய்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical name- Carissa Carandas**
**Family- Apocynaceae**
**Engl-Carandas plum**

இனிப்பும், புளிப்பும் கலந்த சுவையுள்ள அரிய வகைக் காய்கள். பச்சை நிறம் கொண்டு ஆங்காங்கே சிவப்பு நிறமும் காணப்படும். பழங்கள் கறுப்பு நிறம் கொண்டவை. களாக்காயில் நார்ச்சத்து நிறைந்தது. அத்துடன் இரும்புச்சத்தும் அதிகளவில் இதன் பழங்களில் உண்டு. இதைவிட செம்புச்சத்து, தயமின், நாகச்சத்து, நீர்ச்சத்து, பொட்டாசியம் மற்றும் பொஸ்பரஸ் ஆகிய சத்துக்களும் உண்டு.

நீரிழிவு நோயாளிகள் சாப்பிடக்கூடிய பழம் இதில் காணப்படும் நார்ச்சத்து, மற்றும் நாகச்சத்து (Zinc) இரத்தத்தில் சீனியின் அளவை சீராக பேண உதவுகிறது. அதிகளவான செம்பு (copper) மற்றும் தயமின் (thiamine) சத்துக்கள் காணப்படுவதால் இருதய சுற்றோட்டத் தொகுதியை சீராக இயங்க வைக்க உதவுகிறது. களாப் பழத்தில் அதிகளவான நீர்ச்சத்து, பொட்டாசிய மற்றும் செம்புச்சத்து காணப்படுவதால் அதி உயர் குருது அமுக்கத்தை குறைத்து இரத்த அழுத்தத்தை சீராக பேண உதவுகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கும் பாலூட்டும் தாய்மாருக்கும் சிறந்தது களாக்காய் மற்றும் பழங்களாகும். ஏனெனில் ஈமோகுளோபின் (Hemo globin) அளவை இரத்தத்தில் கூட்டக் கூடியது. களாக்காய்களில் அதிகளவு உயிர்ச்சத்து C காணப்படுகிறது. நிர்ப்பீடனத்தை அதாவது நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கக்கூடியது. அத்துடன் கலங்களை புதுப்பித்து கொண்டிருக்கும். புற்றுநோய் வராமல் தடுக்கக்கூடியது. பல்லீறுகளுக்கு



பலத்தை கொடுக்கும். முரசிலிருந்து இரத்தம் கசிவதை தடுக்கக்கூடியது. சருமத்திற்கு கெடுதல் தரும் கூறுகளை எல்லாம் அழித்து இளமையை தக்க வைக்கிறது.

பசி எடுக்க பித்தம் நீங்க களாக்காய் சிறிது ஆனால் பலன் பெரிது. இவ்வளவு மருத்துவக் குணங்கள் நிறைந்த களாக்காய் பெருஞ்செடியை Land scaping அதாவது வேலிகளாக ஆடு, மாடுகள் வராமல் இருப்பதற்கு நட்டு பயன்படுத்தினார்கள். பருவ காலங்களில் கொத்தாக நிறைய பழங்கள் காய்க்கும். ஆனால் இப்போது மக்களால் பயன்படுத்துவது அருகி, அழிந்து வருகிறது. களாக்காய்க்கு ஒரு பழ மொழி உண்டு. 'நாளைய பலாக்காயை விட இன்றைய களாக்காய் சிறந்தது' அதாவது மலிவாக கிடைக்கக்கூடிய போசனைக் கூறுகள் நிறைந்த பழமாகும்.

களாக்காயை உப்புப் போட்டு சேர்த்துச் சாப்பிடலாம். அல்லது களாக்காயை ஊறுகாய் போட்டு சேர்த்துச் சாப்பிடலாம். களாக்காயில் அமிலத் தன்மை உடையது. அத்துடன் நீரில் கரையக்கூடிய உயிர்ச்சத்து B, C ஆகியனவும் களாக்காயில் காணப்படுகின்றது. களாக்காயில் இருக்கும் நீர்ச்சத்து, நார்ச்சத்து உட்பட பல உயிர்ச்சத்துக்களும் கனிமங்களும் உடல் உள் உறுப்புகளுக்கு வலிமை அதிகரிக்கக்கூடியதாகும். களாக்காயில் எலுமிச்சம் பழத்தின் சுவையும் கலந்திருக்கும்.

அதியுயர் குருதி அமுக்கமுடையவர்கள் களாக்காய், பழங்கள் தாரளமாக சாப்பிடலாம். ஆனால் உப்பில் போட்டு ஊறவைத்து சாப்பிடுவதையும் ஊறுகாய் போட்டு சாப்பிடுவதையும் அதியுயர் குருதி அமுக்கம் உள்ளவர்கள் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். களாக்காய், பழங்கள் பருவ காலங்கள் வந்து விட்டால் 2,3 மாதங்கள் தொடர்ச்சியாகக் கிடைக்கும். அஜீரணம் பிரச்சினைகள், வாயுத் தொந்தரவுகள் களாக்காய் சாப்பிடும் போது குறைகிறது. கர்ப்பகாலங்களில் வாந்தி, குமட்டல் இருப்பவர்கள் களாக்காய்களை சாப்பிடலாம். வாந்தி, குமட்டல் நன்கு குறையும். சித்த மருத்துவத்தில் மஞ்சட் காமலைக்கு எப்படி கீழ்காய் நெல்லி சிறந்ததோ, அதே போல் களாக்காய் பெருஞ்செடியின் வேரை சேகரித்து கழுவி, சிறு துண்டுகளாக வெட்டி உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு காலை, மாலை பனை வெல்லத்துடன் சேர்த்து காமாலைக்கு 7 நாட்கள் கொடுத்துவர நல்ல பலனைக் கொடுக்கும். களாக்காயை கிடைக்கும் போது நன்றாக சாப்பிட்டு வர சருமத்தில் சுருக்கங்கள் விழுவதை தடுக்கக் கூடியது. குடல் சம்பந்தப் பட்ட பிரச்சினைகள், பசியின்மை, ஏதாவது நோய்கள் வந்து உடல் பலவீனமாகும் போது இக் களாக்காயை கறி சமைத்து சாப்பிடாலம். நிறைய களாக்காய்களை சேகரித்து நடுவாக்கில் பிளந்து விதைகளை நீக்கி 1 கப் அளவு எடுத்து அதேயளவு உள்ளியும் எடுத்து தோல் சீவி அதையும் தனித்தாக நைய இடித்து வைத்துக் கொண்டு 1 தேக்கரண்டி கடுகு, 1 தேக்கரண்டி வெந்தயம் வறுத்து பொடித்து ஒரு வாணலியில் சிறிது நல்லெண்ணெய் விட்டு கடுகு போட்டு தாளித்து அதில் களாக்காய், உள்ளியைச் சேர்த்து வதக்கி விட்டு பெருங்காயப் பொடியும் சேர்த்து உப்பு, பழம்புளி அளவாக சேர்த்து வதக்கி எடுத்து பயன்படுத்திவர பசியைத் துாண்டும் வயிற்றுப் பொருமல், வாயு கோளாறுகளையும் நீக்கக் கூடியது. இவ் களாக்காய் பழங்களை தாராளமாக எங்கள் பிரதேசத்தில் சேகரிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மனித நேயர்' விருது வழங்கி கௌரவிப்பு




(யாழ்ப்பாணம்)

நல்லூர் றோட்டரி கழகத்தால் வருடம் தோறும் வழங்கப்படும் "மனித நேயர்" விருது இம்முறை றோட்டறி மாவட்டம் 3220 இன் ஆளுநர் சுசேனா ரணதுங்கவுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை அரியாலை ஜெ ஹோட்டலில் நடைபெற்ற நல்லூர் றோட்டறி கழகத்தின் 12 ஆவது பதவியேற்பு நிகழ்வில் இவ் விருது வழங்கி வைக்கப்பட்டது. (நி)

# ரவிகரன் எம்.பி-ஆளுநர் சந்திப்பு



(வவுனியா)

வன்னிமாட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று முன்தினம் வடக்குமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களிலுள்ள முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இச் சந்திப்பில் சமூக ஆர்வலர் கிருஷ்ணபிள்ளை சிவகுருவும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-299)


## லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(2917)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

**0091956156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

**077 839 3974**


# இராணுவச் சிப்பாய் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஏ9 பிரதான வீதியில் உமையாள்புரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வேளை பஸ் தரிப்பிடத்தில் நின்ற இராணுவச் சிப்பாயை சிறப்பு அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக சோதனையிட்ட பொழுது 1 கிலோ 500 கிராம் எடை கொண்ட கஞ் சாவுடன் இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாய் கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (8-316)


## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## மயிலிட்டி உப அலுவலகம்
## ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

விண்ணப்பதாரர் : நவரத்தினம் ஜனாத்தனன்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 16. முனியப்பர் கோவிலடி என்னும் முகவரியில் இவ்வாதனம் அமைந்துள்ளது

குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் ஏகாம்பரம் நடேசன் முகதாவில் 09.03.2017 ஆம்திகதிய 2550ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனம் நவரத்தினம் ஜனார்த்தனன் வந்தடைந்தது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்றும் கட்டுவன் இறையும் வளமாரி நிலப்பரப்பு 04 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் T.தங்கராசா அவர்களின் 12425 ஆம் இலக்க 19.12.2021 ஆம் திகதிய வரைபடத்தின் படி துண்டு 01 ஆகும்

இதன் எல்லைகள்

கிழக்கு- பொன்னையா கனகரத்தினம் சின்னையா சிவலிங்கத்துக்கும் உரிய ஆதனம்

வடக்கு- றோட்டு

மேற்கு- பாலர் ஞானோதய சங்கத்திற்குரிய ஆதனம்

தெற்கு- பொன்னையா ஆனந்தசுந்தரத்திற்குரிய ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை நவரத்தினம் ஜனாத்தனன் என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்

**செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி).**



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு, மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 37 1/4<br>உயரம்:6'<br>தகைமை/தொழில்:BSc, DO<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15058 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Bsc, Msc, Monitering evalvation Officer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/10927 |
| பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா:7 1/4<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L, Customer Care(Pvt)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம், சைவ போசனம்<br>தொ.இ: B/15059 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>8 இல் செவ்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:BBM, MBA, Banking Assistant<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/12780 |
| பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 21 3/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L, Driver(own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15061 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>7 இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:Bsc, MBA, Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/12171 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



## சேவை நலன் பாராட்டு




**திருமதி.கனகாம்பரி சிவனேஸ்வரநாதன்**

இசைக்கலைமணி
(கர்நாடக இசைக்கல்லூரி-சென்னை)
பயிற்றப்பட்ட சங்கீத ஆசிரியர்,
(கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

கடந்த 12 வருடங்களாக எமது பாடசாலையில் அரும்பணியாற்றிய ஆசிரியரின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

யா/பெரியபுலம் மகா வித்தியாலயம் - 24.01.2000-13.06.2001
யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - 14.06.2001-30.06.2003
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம் - 01.07.2003-22.06.2010
யா/வைத்தீஸ்வரா கல்லூரி - 23.06.2010-30.07.2012
யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - 01.08.2012-15.01.2013
யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி - 16.01.2013 - இன்று வரை

(C-1960)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வெடித்துச் சிதறிய பட்டாசு ஆலை

### ❖ 6 தொழிலாளர்கள் பலி
### ❖ தமிழகத்தில் துயரம்



(சென்னை)

தமிழகத்தின் பட்டாசு ஆலையில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் சிக்கி 6 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

இந்நிலையில் அங்கு மீட்புப் பணிகள் தொடர்வதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தின் விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே, கோட்டூர் - அருப்புக்கோட்டை வீதியில் உள்ள பொம்மையாபுரத்தில், சிவகாசியைச் சேர்ந்த நபருக்கு சொந்தமான பட்டாசு ஆலையிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

வழமைபோன்று இந்த ஆலையில் 15 இற்கும் மேற்பட்ட அறைகளில் சுமார் 50 தொழிலாளர்கள் பணி புரிந்து வந்த நிலையில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் பட்டாசு தயாரிப்பதற்கான மூலப் பொருள் கலக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

அவ்வேளை திடீர் உராய்வு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் பட்டாசு ஆலையில் பயங்கர வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்துக் காரணமாக பட்டாசு ஆலையின் 4 அறைகள் தரைமட்டமாகின.

இந்த விபத்தில் 6 பேர் உயிரிழந்ததோடு பலர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்தில் மீட்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாலும் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது. (நி)

## குட்டியின் இறப்பைத் தாங்கமுடியாத தாய்த்திமிங்கலத்தின் நெகிழ்ச்சிச்செயல்



தனது குட்டி இறந்த வலியைத் தாங்க முடியாமல் அதன் இறந்த உடலை தலையில் வைத்துக் கொண்டு நீந்திய திமிங்கலம் குறித்த செய்தியை வெளிநாட்டு ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

டெல்குவா என அழைக்கப் படும் இந்தத் தாய்த் திமிங் கலத்தின் குட்டி புத்தாண்டு தினத்தன்று உயிரிழந்ததாகவும் தனது குட்டியைக் காப்பாற்றும் நோக்கில் அன்றைய தினம் முதல் தனது குட்டியை தலையில் சுமந்து கொண்டு நீந்துவதாகம் வோஷிங்டனில் உள்ள திமிங்கல ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதி டெல்குவாவை அதன் குட்டியுடன் முதன் முதலாக அவதானித்ததாகவும், அப்போது குட்டி உயிருடன் இருந்ததாவும் திமிங்கல ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி தேசிய பெருங்கடல் மற்றும் வளி மண்டல நிர்வாகத் தின் ஆராய்ச்சியாளர்கள் டெல்குவா தனது குட்டியின் இறந்த உடலை தலையில் வைத்துக் கொண்டு சியாட்டில் கடலில் நீந்துவதை புகைப்படம் எடுத்ததாகத் திமிங்கல ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

குட்டியின் சடலம் நீரில் மூழ்கும் போது கடலில் மூழ்கி இறந்த தனது குட்டியின் உடலை மீண்டும் கடலின் மேற்பரப்பிற்கு கொண்டு வருவதாகவும் ஆராய்ச்சி விஞ்ஞானி பிராட்ஹன்சன் தெரிவித்தார்.

டெல்குவா தனது குட்டியை தலையில் வைத்துக் கொண்டு நீந்துவதை துக்கத்தின் அடையாளமாக அவர் சுட்டிக்காட்டினார்.

தனது குட்டியின் இறந்த உடலுடன் நீந்திய காட்சியைப் பார்த்த பல விலங்கியல் வல்லுநர்கள் அதனது தாய்ப்பாசத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்ததாகவும் அவர் தெரிவித்தார். (நி)

## இஸ்ரேலுக்கு பாரிய ஆயுதக்கப்பலை அனுப்புகிறார் ஜோ பைடன்

(ஜெருசலேம்)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், இஸ்ரேலுக்கு 8 பில்லியன் டொலர் ஆயுதங்களை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

அனுப்பப்படவுள்ள ஆயுதக் கப்பலில் ஏவுகணைகள், குண்டுகள் மற்றும் பிற ஆயுதங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ஜோ பைடன் பதவி விலகுவதற்கு பதினைந்து நாட்களுக்கு முன்னர் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காசாவில் போரின் போது கொல்லப்பட்ட அதிகளவான பொதுமக்களின் எண்ணிக்கை காரணமாக இஸ்ரேலுக்கான இராணுவ ஆதரவை நிறுத்துவதற்கான அழைப்புகளை வோஷிங்டன் நிராகரித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் இஸ்ரேலுக்கு 20 பில்லியன் டொலர் பெறுமதியான போர் விமானங்கள் மற்றும் பிற ராணுவ உபகரணங்களை விற்பனை செய்ய அமெரிக்கா அனுமதி அளித்தது.

இந்தக் கப்பலில் வான்வழி ஏவுகணைகள், ஹெல்ஃபயர் ஏவுகணைகள், பீரங்கிக் குண்டுகள் மற்றும் குண்டுகள் உள்ளன என்று அமெரிக்க அதிகாரி தெரிவித்தார்.

பைடன் 20 ஜனவரி 2025 அன்று வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறும் முன், டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்கின்றபோது இஸ்ரேலுக்கு இதுவே திட்டமிட்ட கடைசி ஆயுத விற்பனையாகவும் இருக்கலாம்.

ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ட்ரம்ப் முன்னர் வெளிநாட்டு மோதல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பது குறித்தும், அமெரிக்க தலையீட்டைக் குறைப்பது குறித்தும் பேசினார். ட்ரம்ப் தன்னை இஸ்ரேலின் தீவிர ஆதரவாளராக நிலை நிறுத்திக் கொண்டார். ஆனால் காசாவில் அதன் இராணுவ நடவடிக்கையை விரைவாக முடிக்க இஸ்ரேலை வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புகலிடக் கோரிக்கையாளர்கள் 300 பேருடன் மலேசியாவுக்குள் நுழைய முயன்ற படகுகள்

### திருப்பி அனுப்பியது மலேசியா



(மலேசியா)

மியன்மாரைச் சேர்ந்த அகதிகள் என சந்தேகிக்கத்தக்க 300 குடியேற்றவாசிகளுடன் மலேசியாவிற்குள் நுழைய முயன்ற இரண்டு படகுகளை அந்த நாட்டு அதிகாரிகள் திருப்பி அனுப்பியுள்ளனர்.

போதிய உணவு, குடிநீர் இன்றி களைப்படைந்த நிலையில் காணப்பட்ட 300 இற்கும் குடியேற்றவாசிகளை மலேசியக் கரையோர காவல் படையினர் படகுகள் எல்லைக்கு வெளியே பாதுகாப்பாக அழைத்துச் சென்றன என மலேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மலேசியாவின் லாங்கவி தீவிலிருந்து இரண்டு கடல்மைல் தொலைவில் காணப்பட்ட இந்தப் படகிலிருந்தவர்களின் நிலையை அவதானித்த மலேசிய அதிகாரிகள் அவர்களிற்கு குடிநீரையும் உணவையும் வழங்கியுள்ளனர்.

படகுகளின் பயணம் குறித்த விபரங்களைப் பெறுவதற்காக தாய்லாந்து அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதாக மலேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மலேசியக் கரையோர காவற்படையினர் படகிலிருந்தவர்கள் ரோகிங்யா குடியேற்றவாசிகளா என்பது குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை.

இதேவேளை வெள்ளிக்கிழமை மலேசியாவின் லாங்கவியில் கரையிறங்கிய 196 மியன்மார் குடியேற்றவாசிகளை மலேசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களில் 71 சிறுவர்கள் உள்ளதாகவும் இவர்கள் ரோகிங்யாக்கள் என கருதுவதாகவும் மலேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வைரஸால் அச்சம் ஏதுமில்லை

## சீனா விளக்கம்

**(பீஜிங்)**

**நாட்டில் குறிப்பிடத்தக்க சுகாதார அச்சுறுத்தல் எதுவும் ஏற்படவில்லை என்றும் இந்த வைரஸ் தாக்கமானது வழக்கமான குளிர்காலத் தொற்றுத்தான் என்றும் சீனா தெரிவித்துள்ளது.**



கொரோனா வைரஸ் பரவல் உலக நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தி 5 வருடங்கள் கடந்துள்ள நிலையில் சீனாவில் மீண்டும் புதிய வகை வைரஸ்கள் பரவி வருவதாகச் சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

Human metapneumo virus (HMPV) எனப்படும் ஒரு வைரஸ் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் இந்த வைரஸினால் பாதிக்கப்பட்டவர்கள் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவது தொடர்பான காணொளிகளும் சமூக ஊடகங்களில் வெளியாகி உலக நாடுகளிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இந்த நிலையில் இந்த வைரஸ் பாதிப்புத் தொடர்பாக சீனா தற்போது விளக்கமளித்துள்ளது.

அந்தவகையில் நாட்டில் குறிப்பிடத்தக்க சுகாதார அச்சுறுத்தல் எதுவும் ஏற்படவில்லை என்றும் இது வழக்கமான குளிர்கால தொற்றுத்தான் என்றும் சீனத் தரப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் வடக்கு காற்றின் காரணமாக, குளிர்காலத்தில் வழக்கமாக சீனாவில் நுரையீரல் பாதிப்பு, தொற்று நோய் பாதிப்பு அதிகமாக இருப்பது வழக்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த நோய் தாக்கமானது குறைவான பாதிப்பைக் கொண்டிருக்கிறது என்றும் கடந்த ஆண்டை விட பாதிப்பும் தீவிரமும் குறைவுதான் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சீன மக்கள் மற்றும் சீனாவில் வாழும் வெளிநாட்டினரின் சுகாதாரத்தை உறுதி செய்வதில் சீன அரசாங்கம் எப்போதும் கவனம் செலுத்தும் எனத் தெரிவித்துள்ள அவர், சீனாவுக்குப் பயணம் செய்வது இன்னமும் பாதுகாப்பானது தான் என்றும் விளக்கம் கொடுத்துள்ளார்.

அத்தோடு நோய்த்தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வழிகாட்டு நெறிமுறை வெளியிடப்பட்டுள்ளது என்றும் எதுவும் அச்சுறுத்தும் வகையில் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


சீனாவில் கடந்த சில நாட்களாக கடுமையான காய்ச்சல், இருமல் உள்ளிட்ட அறிகுறிகளுடன் வைத்தியசாலையில் ஏராளமான மக்கள் குவிந்து வரும் நிலையில் இதற்கு எச்.எம்.பி.வி. அல்லது மெடா நியுமோ வைரஸ் என பெயரிடப்பட்டுள்ளது.

வைரஸ் தாக்கம் அங்கு காணப்பட்டாலும் இதுவரை அதனை அவசர நிலையாகச் சீன சுகாதாரத் துறையோ அல்லது உலக சுகாதார அமைப்போ அறிவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இது தொடர்பான நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருவதாக இலங்கை சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப்பிரிவு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## லடாக் பகுதியை தனது மாவட்டமாக அறிவித்தது சீனா

### கடும் ஆட்சேபனை தெரிவித்த இந்தியா



(டில்லி)

இந்திய ஆளுகைக்குட்பட்ட லடாக் பகுதிகளை இணைத்து தனது மாவட்டமாக சீனா அறிவித்துள்ள நிலையில் சட்டவிரோத ஆக்கிரமிப்பு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படாது என இந்தியா கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது

கிழக்கு லடாக்கின் டெம் சோக் மற்றும் டெப்சாங் பகுதியில் இருந்து இருதரப்பு இராணுவமும் தங்களது இடத்திற்கு திரும்பியது.

இந்தச் சம்பவம் நடைபெற்று ஓரிரு மாதங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் லாடாக் பகுதிகளை இணைத்து ஹோடன் மாகாணத்தில் இரண்டு புதிய மாவட்டங்கள் பெயரை சீனா அறிவித்துள்ளது.

இந்த நிலையில் சீனாவின் சட்டவிரோத ஆக்கிரமிப்பு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படாது என இந்தியா தெரிவித்துள்ளது.

"இந்தியப் பிரதேசத்தில் சீனா சட்ட விரோதமாக ஆக்கிரமித்ததை இந்தியா ஒரு போதும் ஏற்றுக் கொண்டதில்லை. சீனாவின் ஹோடன் மாகாணத்தில் இரண்டு புதிய மாவட்டங்களை நிறுவுவது தொடர்பான அறிவிப்பை நாம் பார்த்தோம்.

இந்த மாவட்டங்கள் என்று அழைக்கப்படும் பகுதிகளின் அதிகார வரம்பு இந்தியாவின் லடாக் யூனியன் பிரதேசத்தில் வருகிறது என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பிரம்மபுத்திரா ஆற்றில் உலகப் பெரிய அணை கட்ட இருப்பதாக சீனா அறிவித்துள்ளது.

இது தொடர்பான இந்தியா தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

இந்திய நலனைக் காக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரி வித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்க நகைகளுடன்
## கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட தங்க நகைகளுடன் சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அபுதாபியில் இருந்து இலங்கைக்கு வந்த பயணி ஒருவர் தொடர்பில் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விமான நிலைய பொலிஸார் சந்தேக நபரை நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 4 தங்க நெக்லஸ்கள், 1 பென்டன், 2 வளையல்கள், 2 தங்க வளையல்கள் மற்றும் ஒரு தங்க மோதிரம் ஆகியவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வெலம்பொட பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)



திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் பற்றிய தலவரலாறு மற்றும் திருப் பதிகங்கள் உரையுடனான நூல் தருமை ஆதீன 27 ஆவது குருமகாசந்நிதானம் அவர்களால் அண்மையில் திருக்கோணேஸ்வரத்தில் வெளியிடப்பட்ட போது...



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 300 | 350 | 300-400 | 320 |
| உருளைக்கிழங்கு | 250 | 220 | 220 | 180 | 250 |
| பச்சைமிளகாய் | 800 | 850 | 1100 | 1000-1200 | 1200 |
| தக்காளி | 450 | 400 | 400 | 350 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 220 | 150-200 | 200 |
| கோவா | 180 | 250 | 250 | 220 | 350 |
| கரட் | 300 | 280 | 250 | 300 | 400 |
| பூசணி | 120 | 130 | 160 | 150-170 | 200 |
| புடோல் | 300 | 200 | 250 | 350 | 200 |
| வாழைக்காய் | 150 | 140 | 150 | 100-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 180 | 220 | 200 | 250 |
| பாகற்காய் | 800 | 700 | 600 | 700 | 800 |
| வெண்டக்காய் | 180 | 300 | 300 | 300 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 350 | 130 | 200 |
| பயற்றங்காய் | 700 | 600 | 400 | 700-850 | 500 |
| லீக்ஸ் | 420 | 380 | 300 | 320 | 400 |
| பீற்றூட் | 350 | 460 | 550 | 400 | 600 |
| கறிமிளகாய் | 1000 | 700 | 700 | 700 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | -- | -- |
| போஞ்சி | 400 | 350 | 400 | 500-600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 300 | -- | 300 |
| கீரை – 1 பிடி | 150 | 70 | 150 | 100-120 | 200 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 200-300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 220 | 170 | 120-180 | 180-230 |
| இராசவள்ளி | 450 | 800 | 650 | 700 | 600 |
| வெங்காயப்பூ | 700 | 600 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | 140 | 200 | 250 | 320 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 90 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 80 | 200 |

# இன்று ஒரு தகவல் 296



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## அறிவை அளக்கலாம்

ஒரு நாள் ஒரு அலுவலகத்திற்குப் போயிருந்தேன். அங்கே ஒரு பெரிய அதிகாரி இருந்தார். தன்னிடம் வேலை செய்கிற ஒருவரிடம் ஏதோ சொல்லிக் கொண்டு இருந்தார். அவர் சொல்லச் சொல்ல இவர் அதை கேட்டுக் கொண்டு ஆகா ஓகோ என்று கையைத் தட்டிச் சத்தம் போட்டுச் சிரித்துக் கொண்டு இருந்தார்.

அவர் என்ன சொல்கிறார்... இவர் ஏன் சிரிக்கிறார்... என்று எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அந்தப் பெரிய அதிகாரி போனவுடன் இவரிடம் போய் மெதுவாகக் கேட்டேன்.

ஏன் சேர் அவர் உங்களிடம் சொன்னது நகைச்சுவை மாதிரியும் தெரியவில்லை அதற்கு ஏன் இப்படி அட்டகாசமாகச் சிரிக்கிறீர்களே என்று கேட்டேன்.சேர் அவர் சொல்வது நகைச்சுவை இல்லை என்பது உங்களுக்குத் தெரிகிறது. எனக்கும் தெரிகிறது. ஆனால் அவருக்குத் தெரிய வில்லையே... அவர் சொல்லுவது நகைச்சுவை என்று அவர் எண்ணுகிறார். அதனாலே நான் சிரிக்க வேண்டி இருக்கிறது ஏன் என்றால் அவர் எனக்கு மேலதிகாரி என்றார்.

இந்த ஆள் மிகவும் புத்திசாலி. அறிவுள்ளவர் என்று பெயர் வாங்கி இருக்கிறார். வாழ்க்கையைக் கஷ்டமில்லாமல் ஓட்டத்தெரிந்து வைத்திருக்கிறார்.

அறிவு என்பது என்ன என்று கேட்டால் சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்வது தான் அறிவு என்று சில அறிவாளிகள் பதில் சொல்கிறார்கள்.

இந்த அறிவு என்பது நமது உடம்பிலே எங்கே உள்ளது. மூளையிலே தான் இருக்கிறது.

அதிலே ஒன்றும் சந்தேகமில்லை. இந்த அறிவை அளக்க முடியுமா. முடியும். நமக்குத் தெரிந்த வரைக்கும் அறிவு உள்ளவன்- அறிவு இல்லாதவன் என்று இரண்டு வகையாகப் பிரித்து விடுகிறோம் சுலபமாக. அறிவு உள்ளவனைப் புத்திசாலி என்கிறோம். அறிவு இல்லாதவனை மண்டு என்கின்றோம்.

அனால் அறிவு உள்ளர்களையே நிபுணர்கள் பல வகைகளாகப் பிரிக்கிறார்கள்.

அறிவின் தரத்தைப் பாகுபாடு செய்து முதலில் 200 வரைக்கும் கணக்கிட்டிருக்கிறார்கள். அதற்கு I.Q அதாவது intelligence Quotient என்று பெயரும் வைத்திருக்கிறார்கள். இந்த I.Q 90 இல் இருந்து 100 வரைக்கும் இருந்தால் அவன் சராசரி மனிதன். 110 இலிருந்து 120 வரைக்கும் இருந்தால் அவன் சராசரிக்கும் மேலே. 120 இலிருந்து 130 வரைக்கும் இருந்தால் அவன் ஒரு சிறந்த புத்திசாலி.

130 இலிருந்து 140 வரைக்கும் இருந்தால் அவன் பிறவியிலே புத்திசாலித்தனம் உள்ளவன். 140 இற்கும் மேலே I.Q சென்று விட்டால் அவன் மேதை.அது சரி இதுவரை 90 இற்கும் மேலேயே பார்த்துக் கொண்டு போகிறோமே. இப்போது நமது கணக்கிற்கு வருவோம்.90 இற்கு கீழே போகப்போக மந்தம்... அதிக மந்தம்... அளவு கடந்த மந்தம் என்று பிரித்திருக்கிறார்கள்.

அதனாலே ஒருவருடைய I.Qவை கணக்கிட்டு அவருடைய புத்திசாலித்தனம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைத் திட்டவட்டமாக சொல்லி விடலாம்.

ஒரு பெரிய மனிதன் இருந்தார். வசதியான மனிதர் தான். இருந்தாலும் செலவு செய்ய மாட்டார். கஞ்சன்.

அவர் மனைவிக்கு திடீர் என்று உடம்பு சரியில்லாமல் போய்விட்டது. அவர் நகரத்திற்குச் சென்று ஒரு வைத்தியரை அழைத்து வந்தார். சில நாட்கள் இவரின் வீட்டிலேயே தங்கி இருந்து வைத்தியம் பார்ப்பதற்கு.

அந்த வைத்தியர் கிராமத்திற்கு வந்து அந்தப் பெரிய மனிதர் வீட்டிலேயே சிறிது காலம் தங்கினார். அந்த அம்மாவிற்கு தீவிரமாகச் சிகிச்சை அளித்தார் .இருந்தாலும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. இறந்து போய் விட்டார்.

அதன் பின்பு வைத்தியர் புறப்பட்டார்.

ஐயா நான் புறப்படுகின்றேன் எனக்குத் தர வேண்டிய கட்டணத்தைத் தாருங்கள் என்று கேட்டார். அதற்கு அந்தப் பெரிய மனிதன் வைத்தியரைப் பார்த்து நீங்கள் எனது மனைவியைக் காப்பாற்றினீர்களா? என்று கேட்டார். அதற்கு வைத்தியர் இல்லை என்று சொன்னார்.

சரி.. என் மனைவியைக் காப்பாற்ற முடியாத நீங்கள் அவளை சாகடித்து விட்டீர்களா என்று கேட்டார். அதற்கு வைத்தியர் ஐயோ நான் உங்கள் மனைவியைச் சாகடிக்கவில்லை. அவர் நோயினாலே தான் இறந்தார் என்று கூறினார்.

இப்போது அந்தப் பெரிய மனிதன் சொன்னார். நீங்கள் எனது மனைவியைக் காப்பாற்றவும் இல்லை. சாகடிக்கவும் இல்லை.

காப்பாற்றவும் முடியாத- சாகடிக்கவும் முடியாத உங்களுக்கு நான் ஏன் சிகிச்சைக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்றார். இந்தப் பெரிய மனிதரின் I.Qவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாணத்தின் சுற்றுலா மையம் தொடர்பான கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் மேற்கு கிராம சேவகர் பிரிவின் புளியமுனைக் கிராமத்தில் அமையவுள்ள சமூகம் சார்ந்த சுற்றுச்சூழல் சுற்றுலா மையம் வடமாகாணத்தின் முதன்மையான ஓர் சுற்றுலா மையமாக அண்மையில் அடையாளம் காணப்பட்டது. இது அழகான தாவரங்கள், சில வகையான பறவைகள், நிலப்பரப்புகள் மற்றும் பாரம்பரிய மீன்பிடி நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கொண்ட மிகவும் தூய்மையான கடல் நீரேரியாகும்.இத்திட்டத்தின் முதற்கட்ட செயற்பாடுகளிற்காக சுற்றுலா அமைச்சு ரூபா 9.6 மில்லியனை ஒதுக்கியிருந்தது.

இச்சுற்றுலாத்திட்டத்தை விரைவில் ஆரம்பிப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் புளியமுனைக்கிராமப் பொது மண்டபத்தில் இடம்பெற்றது.

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் ஒரு வழிமுறையாக சமூகம் சார்ந்த சுற்றுலாவை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்

இச் சுற்றுலாத்திட்டம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், சுற்றுலா அமைச்சு, வடமாகாண சுற்றுலாப் பணியகம் , கரைதுரைப் பற்று பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை, கொக்கிளாய் மேற்கு சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் என்பவற்றின் கூட்டிணைப்புடன் செயற்படுத்தப்படவுள்ளது.


குறித்த கலந்துரையாடலில் கரைத்துரைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர், நிரவாக கிராம அலுவலர், வடமாகாண சுற்றுலாப் பணியக அலுவலர் , முல்லைத்தீவு மாவட்டச் செயலக பிரதம அபிவிருத்தி உத்தியோகத்தரும் திட்ட இணைப்பாளருமான ரஜனிக்காந், கொக்கிளாய் மேற்கு கிராம அலுவலர் மற்றும் புளியமுனைக் கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8)

# கடந்த ஆண்டில் மாத்திரம் வவுனியாவில் 41 பேருக்கு எலிக்காய்ச்சல்

## சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தகவல்

**(வவுனியா)**

**கடந்த 2024 ஆம் ஆண்டில் மாத்திரம் வவுனியாவில் 41 பேர் எலிக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.**



வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை சிறுபோகம் மற்றும் பெரும் போகம் போன்ற நெற் பயிர்செய்கைக் காலங்களில் எலிக்காய்ச்சல் தொற்று குறிப்பிட்டளவு பதிவாகியிருக்கிறது.

எனினும் கடந்த 2024 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை 41 பேர் எலிக்காய்ச்சல் நோயினால் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பாதிக்கப்பட்டனர்.

அவர்கள் குணமடைந்து தற்போது வீடுகளுக்குச் சென்றுள்ளனர் எனவும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது. (8-250)

# போதை மாத்திரைகளுடன் இளைஞன் கைது

(மன்னார்)

மன்னாரில் 200 போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் 200 போதை மாத்திரைகள் அடங்கிய பொதியுடன் இளைஞன் ஒருவர் மன்னார்- முருங்கன் பஜார் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (8)

# தில்லைக்கு செல்லும் பாக்கியம் இல்லாதவர்கள் காரைநகர் திண்ணபுரத்திலே ஆயுட் காலம் பூராகவும் கண் குளிரக் கண்டு வழிபடும் பேறு 07.01.2025

நடராசப் பெருமானது திருக்கூத்து தரிசனம் 481

**பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்**
**பித்தனிவன் எனஎன்னை ஆக்குவித்துப் பேராமே**
**சித்தமெனுந் திண்கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த**
**வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே.**

### மாணிக்கவாசகரது நிருத்த தரிசனம்

நான் எனும் அகங்காரம் இருக்கும் வரை நல்லொழுக்கமும், அன்புடைமையும் ஏதுவாகி அறிவைத் தடை செய்கின்ற பாசத்தை நீக்கி அடியேனை "இவன் பித்துப் பிடித்தவன்" என பார்த்தவர்கள் கூறும்படி செய்த இறைவன் திருவடியை விட்டுப் பிரியாமல் கூத்தன் திருவிளையாடலை ஈழத்தில் தில்லைக் கூத்தன் தலத்தில் காண்போம் கும்பாபிஷேகம் காண்போம்.

சிவமுருகர் தாம் உள்ளத்திற் கண்ட தில்லை நடராசப்பெருமான் அருள் வடிவத்தை, திண்ணபுரத்தில் எழுந்தருளி வந்து திருவருள் செய்யுமாறு எம்பெருமானிடம் காதலாகிக் கசிந்து உருகி வழிபட்டு திருவருள் செய்யுமாறு வேண்டிநின்றார். தன்னிடம் இருந்த பொருட்களையும் திரட்டி மற்றும் ஊர் தொண்டர் எல்லோரையும் இத் திருப்பணியில் ஈடுபடச் செய்து, பொருள்களையும் காசுகளையும் இயல்புக்கு தக்கவாறு எல்லோரும் தொழநின்ற திருக்கோயில் சிவமுருகரது தூய நெஞ்சம் போல் பொலிந்து விளங்கியது.

அம்பலவி முருகரால் வளர்க்கப்பட்ட பெரும் இன கந்தன், சங்கரன் எனும் எருதுகளும் கோயிற் திருப்பணியில் நாள் முழுவதும் உணவை மறந்து சிவதொண்டைச் செய்து, அறியாமை மிக்க மனிதரின் வாழ்வு, மேலான இரங்குதல் எருதுகளின் முன்பிறவிப் பயன் ஆகும்.

அங்கு திருநீலகண்டப் பெருமானது கட்டளைப்படி வாலன், கூழையன் எனும் நாகபாம்புகள், கோயிற் பொருள்களைக் காத்து சிவமுருகருக்குப் பெருந்துணையாக ஆலயம் கட்டும் காலத்திலும், பின்னரும் காத்த வரலாறு நம்முன்னோர் சொல்வதை அறியலாம்.

பாம்பு நல்லவரைத் தீண்டுவதில்லை, கள்வரை மாத்திரம் சீறித் துரத்திக் கலைத்துவிடும்.

ஐயனார் கோயிலில் நாள்தோறும் பூசையில் சிவனையே அகத்தில் கண்டு வழிபட்டு, மலர் தூவி அருச்சித்துமுறையிட்டுக் கூறி கண்ணீர் பெருக நின்றார். சிவமுருகரது உறைப்பான நம்பிக்கையைக் கண்ட இறைவன் கனவிலே காட்சி கொடுத்து, சிவலிங்கம் இருக்கும் வழியும் காட்டினார். மாணிக்கவாசகர் திருவாசகத்தில்

**"அந்தமில் பெருமை யழலுருக் கரத்து**
**சுந்தர வேடத் தொருமுத லுருவு கொண்**
**டிந்திர ஞாலம் போல வந்தருளி**
**எவ்வெவர் தன்மையுந் தன் வயிற் படுத்துத்**
**தானே யாகிய தயாபரன் எம்மிறை"**

இறைவனால் ஆட்கொள்ளப்படுந் தன்மை ஒரு மாய வித்தை போலும் கருதுவதாகும்.

ஆசார சீலராய் நல்ல நாளிற் ஊர்காவற்றுரையில் பாய்க்கப்பலில் ஏறி சிதம்பரத்திற்கு வேண்டிய வசதியுடன் கோடிக் கரையில் இறங்கி பிறசிந்தனையில்லாது இறை சிந்தனையுடன் தில்லைக்கூத்தப்பிரானையும் சிவகாமியம்மையாரையும் உள்ளம் உருகி வழிபட்டு தில்லைக்கூத்தன் திருவீதியை வலமாகச் சுற்றி வந்து, சிற்பக் கலை வல்லவர்கள் இருக்கும் இடத்தைத் தேடித்தேடி எம்பெருமான் திருவருளால் சிற்பாசாரியரைக்கண்டு, சிவலிங்கம் ஒன்று செய்து தருதல் வேண்டும் என்று கூற, பார்தருவீர் எனச் சிற்பன் சிவலிங்கங்களைக் காட்டுதலும், சிற்பனிடம் பதினாறு சிவலிங்கங்கள் இருந்ததையும் இறைவன் கனவிலே சொல்லியவாறே, ஏழாவது சிவலிங்கத்திலிருந்து காற்றெழுந்து வீசுதலாகிய ஒரு குறிப்புத் தோன்றியதையும் கண்டு தம்மை ஆட்கொள்ளும் திருவருளே எனவும் சிவமுருகர் சித்தித்து அதிசயம் கொண்டார் அந்த காற்றிருள் அருள் மழை பொழிந்த சோதி வடிவாகி விளங்கும் சிவலிங்கத்தை விலை பேச, வராகன் பதினைந்து ஆக சிற்பன் சொன்னான்.

அவ்வளவு பணம் இல்லாமல் தில்லைக் கூத்தனைச் சித்தித்து தத்தளித்து நீங்கவும் பொழுது சாயவும், சிவமுருகர் நித்திரை இல்லாமல் இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கவும் நடு இரவில் சிற்பியின் கனவிலே தோன்றி பத்து வராகனுக்கு எமதடியவனுக்கு மன மகிழ்வாக கொடுப்பாய் எனவும் உவந்து கூற சிற்பன் சிவமுருகரைத் தேடிச் சென்று இருவரும் சந்தித்து இறைவன் அடியாரது துயர் தீர்ப்பது புதிதல்ல என்று சிவமுருகருக்கு பத்து வராகனுக்குச் சிவலிங்கத்தைப் பெற்றுக் கொடுத்த திருவிளையாடலை உறுதிப்படுத்தி சிவமுருகர் அடைந்த பேரின்பத்தில் கூத்தப்பிரானைத் துதித்தார்.

ஏனைய திருவடிவங்களாகிய ஐந்து கரங்களையுடைய பிள்ளையார், கூரியவேலையுடைய வள்ளிதெய்வயானை சமேத முருகப்பெருமான், சிவசத்தியுடைய உமையம்மையார், சண்டேசுரப் பெருமான், சொல்லப்பட்ட நந்தி தேவர் பலிபீடம் என்பவற்றையும் விதிக்கப்பட்ட அளவின்படி செய்வித்த அந்தச் சிவமுருகர் அத் திருவுருவங்களே அவருக்குச் செல்வமாம்,

அன்பர்கள் உதவிய பொருள்களையும் சேர்த்து திருவுருவங்களைச் செய்தார்.தேடக்கிடையாத செல்வங்களாக அந்த ஏழு திருவுருவங்களையும் பெற்றுக் கொண்டு ஏழு பிறப்பும் இப்பேற்றினால் நீங்கி விடும் என்று குதூகலித்தார், தில்லைக்கூத்தன் திருவடிகளை வணங்கி, போன வழியையே வரும் வழியாக வந்து ஊர்காவற்றுறைக்கு வந்து திண்ணபுரம் வந்து சேர்ந்தார்கள்.

சிவமுருகரும் அடியவர்களும், ஊரவர்களும் ஒன்று கூடிச் சுந்தரேசப்பெருமானது, திருக்கோயிற் கும்பாபிஷேகத்திற்கு சிந்தித்து ஓர் சிறப்பான ஆகம நெறி தவறாது நடத்தி வைத்தார்கள். சிவாச்சாரியார் வேதக்குட்டிக் குருக்கள், அப்பாசாமிக்குருக்கள், சுப்பிரமணியக்குருக்கள், பஞ்சநகேசுவரக்குருக்கள் ஆகம நெறிதவறாது கும்பாபிஷேகம் நிறைவானதும் நடத்திய சிவாச்சாரியர்களும், அடியவர்களும் பெரியோர்களும் கோயிலை ஈழத்துச் சிதம்பரமெனவும், சுவாமியைச் சுந்தரேசர் எனவும், அம்பிகையை சௌந்தராம்பிகை எனவும் சொல்லியும் இடைவிடாது சொல்லியும் திண்ணபுரத்தில் எழுந்தருளிய எல்லையில்லாத பேரருளை அருள்புரிய தில்லைக் கூத்தனே! அடியவர்களுக் கருளுமாறும் அதே வேளையில் தேவர்கள் அங்கே கற்பக மலர்கள் சொரிந்து வழிபட்டார்கள்.

திருத்திண்ணபுரத்து காரைநகர் மக்களும் மற்றும் இலங்கைத் தீவு மக்களும், புண்ணிய பயன்மிக்க அடியார்களும், தெய்வத்தன்மை நிறைந்த திருநீற்றின் ஒளியும், மேலான செல்வமாகிய உருத்திராக்க மணி மாலையும் நாவில் வீடுபேறு அருளவல்ல ஐந்தெழுத்து மந்திரமும், திருவாசகமும், திருமுறைகளையும் ஓதியும், அங்கு சிவனடியார்கள் எல்லோரும் பொய்யான உலகப் பற்றை அறுத்த சிதம்பரத்து மெய்யடியார்களாக போலக் காணப்பட்ட இத் தலத்தை ஈழத்துச் சிதம்பரமாக இலங்கை வாழ் மக்கள் வணங்கினார்கள்.

தில்லைக்குப் போக முடியாதவர்கள் இங்கு திண்ணபுரத்தில் ஆயுட் காலம் முழுவதும் கண் குளிரக் கண்டு வழிபடும் பேறு பெற்றோம்.

(சி-1958)

**க.கு.க.சிவபாலன்**
**போசகர் ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 675





மீனால் புலியை விழுங்க முடியுமா? என்று வந்தியத்தேவன் கேட்டான்.

அவனைச் சுற்றிலும் இருந்தவர்களின் தொண்டைகளிலிருந்து ஒரு பயங்கரமான உறுமல் சத்தம் வெளிவந்தது. அது வந்தியத்தேவனைக் கூட ஒரு கணம் மெய் சிலிர்க்கச் செய்தது.

ரவிதாஸன் உரத்த குரலில் "தேவி கேட்டீர்களா? இவனை இனி உயிருடன் தப்பிச் செல்ல விட முடியாது. முன் இரண்டு தடவைகளில் தங்கள் விருப்பத்துக்காக இவனை உயிருடன் தப்பிச் செல்ல விட்டோம். இனிமேல் அப்படி இவனை விட முடியாது" என்றான்.

"மந்திரவாதி! இது என்ன இப்படிப் பெரிய பொய்யாகச் சொல்லுகிறாய்? நீயா என்னை உயிருடன் விட்டாய்? நான் அல்லவா உன்னைத் தப்பிப் போக விட்டேன்? தேவி! இந்த மந்திரவாதியைக் கொஞ்சம் கவனித்துப் பார்த்துச் சொல்லுங்கள்! இவன் உண்மையில் ரவிதாஸன்தானா? அல்லது ரவிதாஸனுடைய பிசாசா!" என்று கேட்டான் வந்தியத்தேவன்.

ரவிதாஸன் பயங்கரமாகச் சிரித்தான். ஆம்! நான் பிசாசுதான்! உன்னுடைய இரத்தத்தை இன்று குடிக்கப் போகிறேன் என்றான்.

மீண்டும் அங்கிருந்தவர்களின் தொண்டைகளிலிருந்து பயங்கர உறுமல் குரல் வெளியாயிற்று.

இதற்குள் சிறுவன், "அம்மா! இவனிடம் ஒரு நல்ல குதிரை இருக்கிறது. அதை எனக்குக் கொடுக்கச் சொல்லுங்கள்! என்றான்.

குழந்தை! நீ என்னுடன் வந்துவிடு! உன்னை என் குதிரையின் மேல் ஏற்றி அழைத்துக்கொண்டு போகிறேன் என்றான் வந்தியத்தேவன்.

ரவிதாஸன் வந்தியத்தேவனை நோக்கிக் கோரமாக விழித்து "அடே! வாயை மூடிக்கொண்டிரு!" என்று சொல்லி விட்டு நந்தினியைப் பார்த்து "தேவி! சீக்கிரம் கட்டளையிடுங்கள்!" என்றான். நந்தினி நிதானமாக இவர் எப்படி இங்கு வந் தார்? எப்போது வந்தார்?" என்று கேட்டாள்.

"சக்கரவர்த்தி மழைக்கு ஒதுங்கியிருந்த மண்டபத்திலிருந்து அவரை இந்த ஒற்றன் கடத்திக் கொண்டு ஓடி விடப் பார்த்தான். நல்ல சமயத்தில் போய் நாங்கள் தடுத்துப் பிடித்துக் கொண்டோம். ஒரு கணம் தாமதித்திருந்தால் விபரீதமாகப் போயிருக்கும் என்றான் ரவிதாஸன். ஐயா! இவர்கள் சொல் வது உண்மையா? என்று நந்தினி கேட்டாள். தங்களைச் சேர்ந்தவர்கள் உண்மை சொல்லக்கூடியவர்களா என்பது தங்களுக்குத்தானே தெரியும்? எனக்கு எப்படித் தெரியும் தேவி? என்றான் வந்தியத்தேவன்.

நந்தினியின் முகத்தில் தோன்றிய புன்னகை மின்னலைப் போல் மறைந்தது. அவள் ரவிதாஸனைப் பார்த்து "ஐயா! நீங்கள் எல்லாரும் சற்று அப்பால் சென்றிருங்கள் நான் இவரிடம் சில விடயங்கள் தனியாகக் கேட்டு அறிய வேண்டும் என்றாள்.

தேவி! நேரம் ஆகிறது அபாயம் நெருங்குகிறது இந்த வேளையில்..." என்று ரவிதாஸன் கூறுவதற்குள் நந்தினி கடுமையான குரலில் "சற்றுமுன் நாம் செய்து கொண்ட நிபந்தனையை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

மறுவார்த்தை சொல்லாமல் உடனே அகன்று செல்லுங்கள். சக்கரவர்த்தியையும் அப்பால் அழைத்துப் போங்கள்!" என்று கூறி சிறுவனுடைய காதில் "குமாரா! சற்று அவர்களுடன் நகர்ந்து போ! உனக்கு இவரிடமிருந்து குதிரை வாங்கித் தருகிறேன் என்றாள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அணையும் வெள்ளமும்



காட்டாறு ஒன்று இருந்தது. அதன் கரையிலே ஒரு சிற்றூர் அமைந்திருந்தது. அந்தக் காட்டாற்றிலே திடீர் திடீர் என்று வெள்ளம் பெருகும். வெள்ளம் பெருக்கெடுக்கும்போது ஊரில் உள்ள குடிசைகளையும் ஆடு மாடுகளையும் அடித்துக் கொண்டு போய் விடும். இந்தத் திடீர் ஆபத்தை எப்படித் தடுப்பதென்று தெரியாமல் அந்த ஊரார் பல முறை துன்பம் அனுபவித்து விட்டார்கள். கடைசியில் நல்லான் என்ற ஒருவன் அந்தக் காட்டாற்றிற்கு ஓர் அணைகட்டுவதென்று திட்டமிட்டான். ஊர்ப் பெரியார்களின் அன்பும் ஆதரவும் இளந் தோழர்களின் ஒத்துழைப்பும் கொண்டு நல்லான் அந்த அணையைக் கட்டி முடித்தான்.

அணை வெள்ளப் பெருக்கைத் தடுத்ததோடு தோட்டந் துரவுகளுக்கு நீர் தரவும் பயன்பட்டது. அதற்கு நல்லான் அணையென்று பெயரிட்டு அழைத்தார்கள். ஊரார் அவ்வப்போது பழுது பார்த்து அணை உடையாமல் பார்த்துக் கொண்டார்கள். நல்லான் மூப்படைந்து இறந்த பிறகும் அணை இருந்தது. பாட்டிமார் தங்கள் பேரன் பேர்த்தியர்க்கு அந்த அணைக்கட்டின் வரலாற்றைக் கதையாகக் கூறுவார்கள். நல்லான் செய்த முயற்சிகளைக் கதை கதையாகக் கூறுவார்கள்.

நல்லான் இறந்து பல ஆண்டுகள் ஆகி விட்டன. ஒருநாள் முனியன் என்ற ஓர் இளைஞன் அந்த அணைக்கட்டின் பக்கம் சென்றான். அதற்கு முந்திய நாள் வெள்ளம் வந்து அணைக்கட்டு நிரம்பியிருந்தது.

முனியன் நீர் நிறைந்த அந்த அணைக் கட்டைப் பார்த்தான்.

அவனுக்கு மனத்தில் பொல்லாத ஆசையொன்று தோன்றியது. அந்த அணைக் கட்டை ஓர் இடத்தில் உடைத்துவிட்டு அது எப்படிப் பாய்கிறது என்று பார்க்க வேண்டும் என்பதுதான் அவ்வாசை. ஒரு கடப்பாரையினால் யாரும் பார்க்காதபோது அணைக்கட்டுச் சுவரைப் பெயர்த்தான். சிறு துளையின் வழியாக நீர் குபுகுபு வென்று பாய்ந்தது. சிறிது நேரத்தில் சிறு துளை பெரிதாகி ஓடியது. அந்த வெள்ளப் பெருக்கில் ஊரிலிருந்த பல குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டன.

முனியன் பயந்து ஊருக்குள் திரும்பினான். அவன் தாய் தந்தையரும், அவர்கள் வீடும் ஆடும் மாடுகளும் அடித்துச் செல்லப்பட்டன. தன்னால் வந்த வினையைக் கண்டு முனியன் பொங்கிப் பொங்கி அழுதான்அழுதல்போனதெல்லாம் திரும்பியா வந்துவிடும்? அதன் பின் அவன் பல துன்பங்களை அனுபவித்துத்திருந்தினான்.

கருத்துரை :- அணை கட்டுவது அரிய செயல் உடைப் பது எளிது. நற்செயல் கள் செய்தல் அரிது. தீது செய்தல் எளிது. அரிய செயல் செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தெளிவான, அமைதியான மனமே எதிர்பாராத சூழ்நிலைகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பசில் ராஜபக்ஷவின் சொத்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

காலங்கள் எப்படி மாறும் என்பதை எவராலும் கணக்கிட முடியாது.

ஆம், ஒரு காலத்தில் மகிந்த ராஜபக்ஷவும் விமல் வீரவன்ஸவும் மிக நெருக்கமான நண்பர்களாக இருந்தனர்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் விமல் வீரவன்ஸ அமைச்சராகவும் இருந்தார்.

தவிர, தமிழ் மக்களுக்கு எதிராக அறிக்கை விடுவதன் மூலம் மகிந்த ராஜபக்ஷவுடன் நெருக்கமான உறவை வளர்த்துக் கொண்டவர் விமல்.

இதற்கும் மேலாக, ஜே.வி.பியின் முக்கிய தலைவராக இருந்த விமல் வீரவன்ஸ பின்னாளில் ஜே.வி.பியில் இருந்து பிரிந்து, தனிக் கட்சி ஆரம்பித்தார்.

இவையாவற்றுக்கும் பின்னணியில் மகிந்த ராஜபக்ஷவின் உறவே காரணம் என்று கூறுமளவுக்கு ராஜபக்ஷ குடும்பத்துடன் விமல் வீரவன்ஸ மிகவும் நெருக்கமான நட்பைக் கொண்டிருந்தார்.

காலம் நகர்ந்தது. கசப்புகள் ஏற்படலாயின. இப்போது ராஜபக்ஷக்களின் முதலாவது விரோதி என்ற இடத்தில் விமல் வீரவன்ஸ இருக்கிறார்.

உண்மை. முன்னாள் அமைச்சரும் மகிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான பசில் ராஜபக்ஷவுக்கு அமெரிக்காவில் ஏகப்பட்ட சொத்துக்கள் உள்ளன என்ற தகவலை விமல் வீரவன்ஸ வெளிப்படுத்தியபோது, தென்பகுதி அரசியல் அதிர்ந்து போனது.

இதையும் கடந்து, பசில் ராஜபக்ஷவின் பெயரில் அமெரிக்காவில் ஏகப்பட்ட சொத்துக்கள் இருப்பதாக விமல் வீரவன்ஸ கூறியதன் அடிப்படையில், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விமல் வீரவன்ஸவைக் கடந்த ஒரு சில நாட்களுக்கு முன்னர் அழைத்து வாக்கு மூலம் பெற்றுக் கொண்டது.

வாக்குமூலம் வழங்கிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த விமல் வீரவன்ஸ; பசில் ராஜபக்ஷவின் சொத்துக்கள் தொடர்பில் அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுக்குமாயின், அதற்குத் தேவையான ஆதாரங்களையும் ஆவணங்களையும் தன்னால் வழங்க முடியும் என்பதை பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

ஆக, ராஜபக்ஷ தரப்பினர் செய்த அத்தனை அநியாயங்களும் மிக விரைவில் வெளிப்பட்டேயாகும்.

அதிலும் வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ் மக்களைக் கொன்றொழித்த ஆதாரங்களைக் கூட, இராணுவத்தினர் வெளிப்படுத்தக்கூடிய சாத்தியங்கள் உண்டு.

எதுவாயினும் விமல் வீரவன்ஸ கூறிய விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மிக விரைவாக விசாரணைகளை நடத்த வேண்டும்.

அநுர அரசாங்கம் இதைச் செய்யுமிடத்து ராஜபக்ஷ தரப்பினர் செய்த ஊழல்கள் அனைத்தும் நிச்சயம் வெளிப்படும்.

எனவே பசில் மீது அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கையைப் பொறுத்தே ஏனைய விடயங்கள் வெளிவரும் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

# மிக முக்கிய வழக்குகள் தாமதம்; விளக்கம் கோரினார் ஜனாதிபதி

## காரணங்களை எடுத்துரைக்க ஜனாதிபதியை இன்று சந்திக்கிறார் சட்டமாஅதிபர்

(கொழும்பு)

மிக முக்கிய வழக்குகளில் சட்டமாஅதிபர் திணைக்களம் மந்தகதியில் செயற்படுவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்ததுடன் அதற்கான காரணத்தினையும் கோரியிருந்த நிலையில் வழக்குகளில் ஏற்படும் தாமதம் குறித்து விளக்கமளிக்க ஜனாதிபதியை சட்டமாஅதிபர் இன்று சந்திக்கவுள்ளார்.

கடந்த டிசம்பர் ஒன்பதாம் திகதி சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தைக் குறிக்கும் நிகழ்வின் போது பேசிய ஜனாதிபதி வழக்குகளைத் தாக்கல் செய்வதில் சட்டமாஅதிபர் திணைக்களத்தின் தாமதங்கள் குறித்து பகிரங்கமாகக் கேள்வி எழுப்பியிருந்தார்.

சட்டமாஅதிபர் திணைக்களம் ஏழு ஆண்டுகளாக ஒரு கோப்பைப் பூட்டி வைத்திருப்பது நம்ப முடியாதது. அதே போல் சில கோப்புகள் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து அவை மோசமடையும் வரை தொடப்படாமல் இருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று ஜனாதிபதி கூறியிருந்தார்.

இந்நிலையில் பல உயர்மட்டக் குற்ற வழக்குகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதில் சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறித்து ஜனாதிபதியுடனான சந்திப்பில் விவாதிக்கப்படவுள்ளதாக அறியப்படுகிறது.

குற்றவியல் வழக்குகளில் விசாரணைகளை முழுமையாக முடிக்காமல், வழக்குப் பதிவுகள் மற்றும் அறிக்கைகளை பொலிஸார் அனுப்பும் போது கோப்புகளைத் திறக்கவோ அல்லது நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாதிருக்கவோ சட்டமா அதிபர் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

வழக்குத் தொடரப்படாததற்கான குற்றச்சாட்டுக்களின் பின்னணியில், குறிப்பாக உயர்மட்டங்களுக்கு எதிரான முறைப்பாடுகளில் சட்டமாஅதிபர் திணைக்களம் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான கடுமையான குற்றவியல் வழக்குகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்படுவதற்கான முக்கிய காரணம் பொலிஸ் விசாரணைகள் முழுமையாக முடிக்கப்படாததே என்று சட்டமாஅதிபர் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவு குறித்து விளக்கமளிக்க சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்திக்கவுள்ளார்.

2015 பிணை முறிப் பத்திரஏலம், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் உள்ளிட்ட முக்கிய ஏழு வழக்குகளின் விசாரணைகளை விரைவுபடுத்துமாறு பொதுப் பாதுகாப்பு அமைச்சகம் கடந்த ஆண்டு ஒக்ரோபரில் பதில் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

# வடமராட்சியில் குருதித் தட்டுப்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தற்போது A+, A-, O- ஆகிய இரத்த வகைகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக இரத்ததானம் செய்ய விரும்புவோர் மற்றும் குருதிக் கொடையாளர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு வருகை தந்து இரத்ததானம் வழங்கி உதவுமாறு வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் வடமராட்சியில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் இரத்ததான முகாம்களை உங்களது ஊரில் / கழகங்களில் நடாத்த விரும்பின் 076 617 0567 எனும் இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறும் வைத்தியசாலையின் இரத்த வங்கியின் சார்பில் அறியத்தரப்பட்டுள்ளது. (ம-7,33)

## வேலைவாய்ப்பு மோசடிக்கு உடந்தை

# முன்னாள் அமைச்சர் மனுஷ நாடு திரும்பியவுடன் கைது

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி தொடர்பில் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவைக் கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மனுஷ நாணயக்காரவின் சகோதரரான திசர இரோஷன நாணயக்கார நிதி மோசடி குற்றச்சாட்டில் கடந்த 28ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் பின்லாந்தில் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதாகத் தெரிவித்து தனிநபர்களிடமிருந்து 3 பில்லியன் ரூபா வரையில் மோசடி செய்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மோசடி செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவையும் கைது செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது மனுஷ நாணயக்கார வெளிநாடு சென்றுள்ள நிலையில், நாடு திரும்பியவுடன் உடனடியாக அவரைக் கைது செய்ய பாதுகாப்புப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிய முடிகிறது.(ம-7)

# பிரதிப் பொலிஸ்மா அதிபர் பெயரைப் பயன்படுத்தி மோசடி

## ஒருவர் அதிரடிக் கைது

பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்ற போர்வையில் வர்த்தகர்கள் உள்ளிட்ட சிலரை ஏமாற்றிய குற்றச்சாட்டில் பொறளைப் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவரைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

வட்ஸ்அப் மூலம் பணத்தை மோசடி செய்வதற்குப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரின் பெயர் மற்றும் புகைப்படங்களைப் பயன்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்ற போர்வையில் தொழிலதிபர்களுக்கு தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு பொய்யான முறைப்பாடுகளைப் பதிவுசெய்து வழக்குத்தாக்கல் செய்வதாக அச்சுறுத்தி நிதி மோசடியில் ஈடுபட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி கைது செய்யப்பட்ட சந்தேகநபர் புதுக்கடை இலக்கம் 01 நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-7)

# யானைகளைக் கண்காணிக்க ஜி.பி.எஸ் தொழில்நுட்பம்

காட்டு யானைகளின் வழித்தடங்களை அடையாளம் காண்பதற்காக ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்துடன் கூடிய யானைகளுக்கான கழுத்துப்பட்டியொன்றை அறிமுகப்படுத்துவதற்குக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய யானைகள் கூட்டமாக நடமாடும் போது அதில் பிரதான யானைக்கு ஜி.பி.எஸ் கருவியை அணிவிப்பதற்கு வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதற்காக விமானப் படையின் ஆளில்லாக் கமரா ஊடாக உதவி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய குறித்த ஜி.பி.எஸ் கருவி அடங்கிய கழுத்துப்பட்டி தற்போது யானைகளுக்கு அணிவிக்கப்படுவதாக வனஜீவராசிகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான ஒரு தெளிவூட்டல் - பகுதி - I


05




கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.





உள்ளூராட்சி மன்றங்கள் அனுமதிப்பத்திரம் வழங்கல் மூலம் வருமானம் தேடல்




உள்ளூராட்சி மன்றங்கள் சேவைகள் வழங்கல் மூலம் வருமானம் தேடல்




உள்ளூராட்சி மன்றங்கள் பற்றாணைக் கட்டணங்கள் மற்றும் குற்றப்பணங்கள் மூலம் வருமானம் தேடல்




உள்ளூராட்சி மன்றங்களின் ஏனைய வருமானங்கள்

முன்னோடி முகவராக உள்ளது. மாகாண மட்டத்தில் அபிவிருத்தியில் சமநிலையைப் பேணுவதற்காகப் பெரும் முயற்சியெடுத்து செயலில் ஈடுபடுத்தியுள்ள பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் நாட்டின் அபிவிருத்தியில் சமநிலையற்ற பிரதேசங்களை வளம்பெறச் செய்வதற்கு உதவுகின்றது.

**உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தில் மாகாண சபைகளின் பங்கு**

மாகாண சபைகளாவன பிராந்தியமொன்றின் ஆட்சிக்காக ஒரு வரையறுக்கப்பட்ட மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட நிறுவனங்களாகும். இம் மாகாண சபைகள் உள்ளூராட்சி சபைகள் அல்ல.

மாகாண சபைகளின் உள்ளூராட்சி நிர்வாகம் சம்பந்தமான அதிகாரம் நாட்டின் பிரதான சட்டமான அரசியலமைப்பின் மூலம் கிடைக்கின்றது. அவை அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தின் 9 ஆவது அட்டவணையின் 4.1, 4.2, 4.3, 4.4 ஆகிய பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன.

பிராந்தியத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் பணிகளின் மேற்பார்வைக்கும் (படம் -1 ஐப் பார்க்க) கலைப்பதற்குமான அதிகாரம் அப் பிராந்திய மாகாண சபைக்கு உண்டு. ஆனால் கலைக்கும் பொருட்டு மாகாண சபை ஆளுநர், உள்ளூராட்சி அமைச்சர், உள்ளூராட்சி ஆணையாளர், உதவி ஆணையாளர் மற்றும் பிற அரசாங்க அலுவலர்களின் சேவைகள் பெறப்படல் வேண்டும்.

**மாகாண உள்ளூராட்சித் திணைக்களங்கள்**

உள்ளூராட்சித் திணைக்களத்தின் வரலாறும் வளர்ச்சியும் பற்றி ஆராயும்போது ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் அதாவது 1931ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட டொனமூர் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின்படி இலங்கையில் உள்ளூராட்சித் திணைக்களம் நிறுவப்பட்டது.


டொனமூர் காலத்தின் பின்னர் உள்ளூராட்சித் துறை பரவலாக விஸ்தரிக்கப்பட்டதுடன் மாநகர சபைகள், நகர சபைகள், பட்டின சபைகள் மற்றும் கிராம சபைகள் என 4 வகையான உள்ளூராட்சி சபைகள் நாடுபூராகவும் விஸ்தரிக்கப்பட்டன.

உள்ளூராட்சி சபைகளுக்கு ஆலோசனை கூறுதல், வழிகாட்டுதல், ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் அவற்றை மேற்பார்வை செய்யும் பணிகள் உள்ளூராட்சித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதோடு உள்ளூராட்சித் திணைக்களத்தின் தலைமை நிர்வாகியாக உள்ளூராட்சி ஆணையாளர் பதவி உருவாக்கப்பட்டது.

அதன் பின்னர் 1946ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களை நியமிப்பதற்கான சட்டத்தின் (Local Government – Administrative Regions) மூலம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களின் பதவி மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

(தொடரும்)

உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளின் மேற்பார்வை




படம் -1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம்...

முந்தவராவார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## மின் தாக்கி...

வவுனியா, ஓமந்தை, கொம்பு வைத்தகுளம் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் மின்சாரம் தாக்கி யானை ஒன்று கடந்த மாதம் இறந்துள்ளது.

இறந்த யானையை இராணுவத்தினர் துண்டு துண்டாக வெட்டி குளத்திற்குள் வீசியதாகவும் அதன் உடற்பாகங்கள் குளத்தில் காணப்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவித்ததையடுத்து வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த விசாரணைகளையடுத்து மூன்று இராணுவ வீரர்கள் நேற்று முன்தினம் வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மூவரையும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தனர். (ம-7,250)

## விபத்துக்களால்...

துள்ளனர்.

2020, 2021, 2022, 2023, 2024 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற விபத்துக்கள் தொடர்பில் போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பணிப்பாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்.ஏ.கே.ஏ. இந்திக ஹபுகொடவின் மேற்பார்வையில் இடம்பெற்ற கணக்கெடுப்பில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி 2020ஆம் ஆண்டில் 2,363 பேரும், 2021ஆம் ஆண்டில் 2,557 பேரும், 2022ஆம் ஆண்டில் 2,540 பேரும், 2023ஆம் ஆண்டில் 2,321 பேரும், 2024ஆம் ஆண்டில் 2,359 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இதுதவிர, 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் நவம்பர் 30ஆம் திகதி வரை நடந்த பேருந்து விபத்துக்கள் தொடர்பான தகவல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி, கடந்த 11 மாதங்களில் 198 பேருந்து விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

அவற்றுள் 50 இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து விபத்துக்களும், 148 தனியார் பேருந்து விபத்துக்களும் பதிவாகியுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.(ம-7)

## சட்டம்...

கொலைவெறித் தாக்குதல் தொடர்பாக கேள்வியெழுப்பியபோது மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரத்தில் யாழ். நகரில் நடைபெற்ற வன்முறைச் சம்பவம் பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் நான்கு குற்றவாளிகளைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தி இருக்கின்றோம். இரண்டு சம்பவங்களையும் குறித்து புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

மேலதிக சாட்சிகளை எடுத்து மிகுதியான சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுள்ளோம். இதற்குரிய ஆலோசனைகள் என்னால் உயர் அதிகாரிகளுக்கும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் பொறுப்பதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களைப் பிடித்து குற்றவியல் சட்டக் கோவையின் 81ஆவது பிரிவின் கீழ் வழக்குத் தாக்கல் செய்து வருகின்றோம்.

இனிவரும் காலங்களில் குறித்த நபர்கள் அவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடாமல் இருப்பதற்காக கட்டுக்கோப்பான சட்டப் பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்து நீதிமன்றத்தின் ஆணையைப் பெற்று வருகின்றோம்.

குறித்த நபர்கள் எதிர்வரும் காலங்களில் தொடர்ந்து குறித்த குற்றச் செயல்களில் ஈடுபட்டால் அதிக தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்ற ஆணையில் குற்றவியல் சட்டக் கோவையின் 81 ஆவது பிரிவின் கீழ் வழக்குத்தாக்கல் செய்து வருகின்றோம் எனத் தெரிவித்தார். (ம-7)

## ஜனநாயக...

பகுதியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடி அவர்களும் இணங்கும் பட்சத்தில் இணைந்து போட்டியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7,250)

## சுண்ணக்கல்...

லிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதிகளில் சட்டவிரோதமான முறையிலும், வழங்கப்பட்ட அனுமதிகளுக்கு மேலதிகமாகவும் சுண்ணக்கல் அகழ்வுகள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்களால் தொடர்ந்து குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், சுண்ணக்கல் ஏற்றிச் சென்ற கனரக வாகனங்களைப் பிடித்து சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

அதனையடுத்து, சுண்ணக் கற்களை உரிய அனுமதிகளுடனேயே எடுத்துச் செல்வதாகவும், கடந்த 14 ஆண்டுகளுக்கு மேலாக சுண்ணக்கல் வர்த்தகத்தில் தாம் ஈடுபட்டு வருவதாகவும், சிற்றி ஹாட்வெயாரின் உரிமையாளர் யாழில் ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், சட்டவிரோதமான முறையில் சுண்ணக்கல் அகழப்படுவதாகக் கூறப்பட்ட பகுதிகளுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று, சுண்ணக்கல் அகழப்பட்டு பாரிய பள்ளங்களாகக் காணப்பட்ட இடங்களைப்பார்வையிட்டனர்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கடற்தொழில் அமைச்சர் கருத்துத் தெரிவிக்கும்போது, யாழில் இடம்பெறும் சுண்ணக்கல் அகழ்வு நடவடிக்கைகளுக்கும், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கும் அரச அதிகாரிகளே பொறுப்புக்கூற வேண்டும்.

இது தொடர்பிலான விசாரணைகள் விரைந்து முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (ம-7,33)

## போதை...

ருந்து அம்பாந்தோட்டை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து ஒன்றில் வவுனியா பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.01.05
சீட்டிழுப்பு இலக்கம் 5707
J 2 6 5 4 4 5
அத சம்பத J 5 4 4 5
சீட்டிழுப்பு இலக்கம் 282
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.01.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1737
C 39 40 57 78 C
Double Chance 44200

மெகா பவர்
திகதி 05/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2055
P 11 03 18 33 69

லக்கி 7 VIP
திகதி 2025.01.05
சீட்டிழுப்பு இலக்கம் 533
J 0 0 8 6 8 2 J

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3949
சீட்டிழுப்பு திகதி 05.01.2025
L 14 25 46 61
L

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.05
சீட்டிழுப்பு இலக்கம் 1016
விருச்சிகம் 02 35 48 50 விருச்சிகம்
17457 14

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.01.2025 வெற்றி வாரம் 415
W 1 3 0 7 2 2
99798
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,557,129.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2681
சீட்டிழுப்பு திகதி 2025.01.05 தினம் ஞாயிற்றுக்கிழமை
37 49 58 66 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,106,776.00

சனிதா
திகதி 05.01.2025 வெற்றி வாரம் 4842
22 28 58 68 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,836,246.80
ரூ. 100,000/- 78945

சசிரி
வெற்றி வாரம் 594
சீட்டிழுப்பு திகதி 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 13 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

சீட்டிழுப்பு வாரம் 4393
சீட்டிழுப்பு திகதி 05.01.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
22 26 41 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,138,368.40
208193

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 26 06 30 33 61
1857
05.01.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.560,891,003.40

ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2507
சீட்டிழுப்பு திகதி : 2025.01.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,211,220.80
04 19 58 67 M
116768


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர தலைமையிலான அரசு ஊடகங்களை அச்சுறுத்துகின்றது

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான தற்போதைய அரசாங்கம், ஊடகங்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், ஊடக ஒடுக்குமுறை தொடர்பில் அரசாங்கத்துக்கு விசேட தேவையொன்று ஏற்பட்டுள்ளது.

ஆட்சியைப் பொறுப்பேற்று மூன்று மாதங்களுக்குள் பல சந்தர்ப்பங்களில் அரசாங்கம் ஊடகங்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக அரசாங்கப் பேச்சாளரால் பத்திரிகைகளின் பெயர் குறிப்பிடப்பட்டு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகளைக் கடுமையாக எதிர்க்கின்றோம்.

நல்லாட்சி அரசாங்கத்திலும் ஊடகங்கள் அரசாங்கத்தின் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தன.

ஆனால் நாம் அவற்றை அச்சுறுத்தவில்லை. ஊடகங்கள் முன்வைக்கும் விமர்சனங்களிலுள்ள யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

அதனை விடுத்து ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதை அனுமதிக்க முடியாது. மாறாக பிழையான அல்லது போலிச் செய்திகள் வெளியிடப்பட்டால் அதற்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார். (ம-7)

# ஊடகங்களை ஒருபோதும் அச்சுறுத்தி அடக்கமாட்டோம்

## அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

கடந்த அரசுகள் போல நாமும் ஊடகங்களை அச்சுறுத்தி அடக்கமாட்டோம் என அமைச்சரவையின் பேச்சாளர் மருத்துவர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

ஊடகங்கள் நடுநிலையுடன் சுதந்திரமாகச் செய்திகளை வெளியிட முழு உரிமையுண்டு.

அதனை எவரும் தடுத்து நிறுத்த முடியாது. கடந்த ஆட்சிக் காலங்களில் படுகொலை செய்யப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்போம். நீதியை எதிர்பார்த்து அந்த ஊடகவியலாளர்களின் குடும்பங்கள் அனுபவிக்கும் வலி, வேதனை எமக்குத் தெரியும். எனவே, அவர்களின் நீதிக்கான வேண்டுதலை நாம் நிறைவேற்றியே தீருவோம்.

ஊடகங்களை அடக்கிக் கொண்டு ஆட்சியை முன்னெடுக்க முடியாது.

அவ்வாறு செய்த அரசுகளுக்கு இறுதியில் என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும் என்றார். (ம-7)

# அரிசி இறக்குமதிக்கான கால அவகாசத்தை நீடிக்கப்போவதில்லை

## அமைச்சர் வசந்த சமரசிங்க



அரிசி இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்தை மீண்டும் நீடிக்கப்போவதில்லை என வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் தனியார் வர்த்தகர்களுக்கு அனுமதிப் பத்திரம் இன்றி அரிசி இறக்குமதி செய்வதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளது.

தற்போதைய நிலையில் சுமார் 84 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி அதன் ஊடாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், அரிசி இறக்குமதிக்காக வழங்கப்பட்ட கால அவகாசம் எதிர்வரும் 10ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதிக்குப் பின்னர் அரிசி இறக்குமதிக்கான கால அவகாசம் மீண்டும் நீடிக்கப்படாது என்றும், அவ்வாறு வர்த்தகர்களால் அரிசி இறக்குமதி செய்யப்பட்டால் அவை மீண்டும் திருப்பி அனுப்பப்படும் என்றும் அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

மீண்டும் லிங்கம் கூல்பார்
முனீஸ்வரா கபே அருகாமையில்
**மொறாயஸ் மூக்குக் கண்ணாடி அகம்**
1962 ஆம் ஆண்டு தொடங்கி வெலிங்ரன் திரையரங்கு முன்பாக
(No. 334, Clock Tower Road, Wellington Junction, Jaffna)
இயங்கி வந்த மொறாயஸ் மூக்குக் கண்ணாடி அகம் மீண்டும் அதே இடத்தில் இயங்குகின்றது.வாசிப்பதற்கு உரிய கண்ணாடி (Reading only) ரூபா 800 க்குப் பெற்றுக்கொள்ள முடியும். கண் பரிசோதனை இலவசமாக செய்து இரண்டு பார்வைக் கண்ணாடி ரூபா 4000 இல் இருந்து தரமான கண்ணாடியை பெற்றுக்கொள்ள முடியும். பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு விசேட சலுகையுடன் மூக்குக்கண்ணாடி வழங்கப்படும். வன்னி, வடமராட்சி மற்றும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.
No. 334, Clock Tower Road, Wellington Junction, Jaffna.
அறக்கட்டளை நிறுவனத்துக்கு மிகக் குறைந்த விலைக்கு மூக்குக் கண்ணாடி தரப்படும்.
(2935)
077 484 5379 / 076 642 3605

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1963)
076 825 7716 (ஆகாஸ்)

**வீடு விற்பனைக்கு உண்டு**
பருத்தித்துறை வீதி, இருபாலை (Express Tutory க்கு அருகில்) 2 ½ பரப்பு உடன் கூடிய 4 அறைகள், 5 பாத்ரூம், கராஜ் உடன் வீடு விற்பனைக்கு உண்டு.
(2936)
076 337 0335

**யோக்கட் கொள்வனவுகள்**
பாடசாலைகளுக்கு அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
அதிபர்/ ஆசிரியர் எம்மை தொடர்பு கொள்ளலாம்.
48/=
~~80/=~~
Happy Supermarket
உரும்பிராய்
(518)
+94 76 800 65 00

**காணி விற்பனைக்குண்டு**
**யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டியில் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- உடுப்பிட்டி சன்னதி கோயில் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- நல்ல சூழல், நன்னீரூற்று, நிலப்பரப்பு
- பொக்கன் சந்திக்கு அருகாமையில் உடுப்பிட்டி வாசிக சாலை சந்தி 300 மீற்றர் தூரம்
- சன்னதி முருகன் கோயில் 2 கிலோமீற்றர் கெருடாவில் கந்தசாமி கோயில் 200 மீற்றர் தூரம்
- வழி இலக்கம் 751 மற்றும் 767 அரச, தனியார் பேருந்து செல்லும் பிரதான காபற் வீதி
- பார்வையிடும் நேரம் : காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை
(2940)
தொடர்புகளுக்கு:
070 290 2338, 076 017 1105

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டப் பகுதியில் இரண்டு பரப்பு பெறுமதியான நிலத்துடன் முழுவதும் மாபிள் பதிக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட அதி சொகுசு வசதிகளுடன் ஆறு அறைகள் கொண்ட மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
(517)
மேலதிக தகவல்களுக்கு அழைக்கவும் :
077 391 2298/ 076 009 8661

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
வீமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1964)

**காணி விற்பனைக்கு**
யாழ். ராசாவின் தோட்டம் வீதியில் 6 பரப்பு, 5 பரப்பு 4 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
(2937)
077 723 2535

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org